புதிய வகுப்புகள்
G. C. E. A/L O/L
1980 / 81 ஆகஸ்ட், டிசம்பர்
ஆரம்பம் 18-1-80
லோகநாதன்
இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் 8

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

மலர் 21 மார்கழி 30 ஸபர் 25 இதழ் 336
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 14-1-80

தரத்தில் நிகரற்ற
மான், முயல்,
விளக்கு, வரிக்குதிரை
செவனமார்க்
ஓடுகளுக்கு
மு. நா. பொன்னம்பலம்
36, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

# இந்திராவின் புதிய அரசாங்கம் பதவியேற்கிறது

(புதுடில்லி)

இந்தியாவின் ஏழாவது பாராளுமன்றத்தை அலங்கரிக்கப்போகும் இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவி திருமதி இந்திரா காந்தியின் புதிய அரசாங்கம், இன்று திங்கட்கிழமை, ராஷ்டிரபதிபவனில் பதவியேற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



புதியஅமைச்சரவை சம்பந்தமாக திருமதி இந்திரா காந்தி கடந்த இரண்டு தினங்களாகத் தமது கட்சி சிரேஷ்ட உறுப்பினர்களுடனும், தி. மு. க. தலைவர் மு. கருணாநிதியுடனும் நடத்திய ஆலோசனைகளைத் தொடர்ந்து, புதியஅரசாங்கத்தின் விபரம் இன்று வெளியாகும் என்று நம்பப்படுகிறது.

## பாண்டிச்சேரியின் புதிய அரசாங்கம்

(புதுச்சேரி)

பாண்டிச்சேரி யூனியன் பிரதேச சட்டசபையின் (தி. மு. க- இந்திரா காங்கிரஸ்- முஸ்லிம் லீக் கூட்டணியின்) தலைவராக திரு. டி. இராமச்சந்திரன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, புதிய அரசை அமைக்குமாறு பாண்டிச்சேரி லெப்டினன்ட் கவர்னர் பி.டி. குல்கர்ணி திரு. இராமச்சந்திரனைக் கேட்டுள்ளார்.

பாண்டிச்சேரியில் கடந்த வருடம் நவம்பர் மாதம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ராஷ்டிரபதி ஆட்சி நாளை செவ்வாய்க் கிழமையுடன் முடிவு பெறுகிறது.

அநேகமாக இன்று தமது அமைச்சரவையின் பட்டியலை திரு. இராமச்சந்திரன், லெப்டினன்ட் கவர்னரிடம் சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய அரசாங்கத்தில் ஐந்து அமைச்சர்களுக்குப் பதிலாக ஆறு அமைச்சர்கள் இடம் பெறுவார்கள் என்று திரு. இராமச்சந்திரன் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இது சம்பந்தமான அனுமதியை அவர் லெப்டினன்ட் கவர்னரிடம் எதிர்பார்த்துள்ளார். (அமைச்சரவையில் ஐந்து உறுப்பினர்களுக்கு மட்டுமே இதுவரை இடம் உள்ளது குறிப்பிடத்தக்கது)

கப்பல் பேர விவகாரம் :

## தலைமை நீதிமன்ற நீதிபதி நியமிக்கப்படமாட்டார்!

(சென்னை)

பல்கேரிய கப்பல் பேர விவகாரம் சப்பந்தமான குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகள் நடத்த பாரத தலைமை நீதிமன்ற நீதிபதி ஒருவரை நியமிக்க தம்மால் முடியாதிருப்பதாக பாரத தலைமை நீதிபதி திரு. சந்திரஜூட் தெரிவித்துள்ளார்.

பல்கேரிய கப்பல் பேர விவகாரம் சம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு. கருணாநிதி, தமிழ் நாடு சட்டசபையில் குற்றம் சாட்டியதும் இதனை மறுத்த தமிழக முதலமைச்சர் நீதிவிசாரணை நடைபெறும் என்றும் தலைமைநீதிபதி ஒருவர் இதுசம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்வார் என்று அறிவித்திருந்ததும் தெரிந்ததே.

இதுசம்பந்தமாக அன்றைய காபந்து பிரதமர் திரு. சரண் சிங்குக்கு தாம் அறிவித்திருப்பதாகவும் முதலமைச்சர் தெரிவித்திருந்தார்.

பாரத தலைமை நீதிபதி திரு. சந்திரஜூட், இதுசம்பந்தமாக விடுத்தசெய்தியில்; பாரத தலைமை நீதிமன்ற நீதிபதி ஒருவரைநியமிக்கதாம் இயலாதிருப்பதாகவும், இது சம்பந்தமாக மத்திய அரசுக்கு தாம் அறிவித்திருப்பதாகவும் கூறியுள்ளார். இந்த முடிவை மத்திய அரசு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனுக்கும் அறிவித்துள்ளது.

### அறிவித்தல்

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நாளை 15-1-80 செவ்வாய்க்கிழமை 'ஈழநாடு' அலுவலகத்திற்கு விடுமுறையாதலால் 16-1-80 புதன் கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவர மாட்டாது.

நிர்வாகி

சோவியத்எதிர்ப்பு:

## அமெரிக்காவுக்கு மேலும் ஆதரவு

(வாஷிங்டன்)

சோவியத்யூனியன்களுக்கான தானிய ஏற்றுமதியை தடைசெய்யவேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கைக்கு மேலும் பல நாடுகள் ஆதரவு வழங்கியுள்ளன.

வாஷிங்டனில் இது சம்பந்தமாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து கனடா, ஆஸ்திரேலியா, ஆர்ஜன்டீனா உட்பட பொதுநல அமைப்பு நாடுகள் அமெரிக்காவுக்கு முழு ஆதரவையும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவிலில் இன்று திங்கட்கிழமை மாலை
தென்னிந்தியப் பாடகரின் இலவச இசைக்கச்சேரி
எம். பாலமுரளிகிருஸ்ண ★ திருமதி பி. அபயாம்பிகை
இருவரும் பாடுகிறார்கள்
வயலின்: அன்னவரப்பு இராமஸ்வாமி
மிருதங்கம்: தஞ்சாவூர் உபேந்திரன்
பிரவேசம் இலவசம் - சகல இடங்களுக்கும் பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
4652

விவசாயிகளே! நீங்கள் எதிர்பார்த்த அற்புதமான, சிக்கனமான, சக்திவாய்ந்த சர்வபூச்சிநாசினி வந்துவிட்டது!!
நெல், உருளைக்கிழங்கு, மிளகாய்,
வெங்காயம், மரக்கறிவகை, புகையிலை
ஆகிய எல்லாப் பயிர்களையும் பாதிக்கும்
எல்லாப் பூச்சி, புழுக்களையும் உடனே கட்டுப்படுத்துவதுடன்
நீடியகாலம் தங்கும் தன்மையையும் தரும்.
பரத்தியன் 6|3
450 மிலி மீற்றர், 225 மிலி லீற்றர்
போத்தல்களில் கிடைக்கும்.
கிடைக்குமிடம்:
அக்ரேஸ் லிமிட்டெட்,
56, கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம்.
ஏக விநியோகஸ்தர்கள்:
ஜெகெம்
39, பிறிஸ்டல் பில்டிங்,
51, யோக் வீதி, கொழும்பு.
தொலைபேசி: 24353.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### பயிற்சி

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீனமுறையில் வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor) Building Technology, PMG Certificate பயிற்சிகள் 16-1-80 ஆரம்பமாகின்றன. National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். இலவச கையேட்டிற்கு எழுதவும். 4597

நாடக, அரங்கக் கல்லூரியால் நடிப்பு, நெறியாள்கை, பிரதியாக்கம், ஒப்பனை, மேடை நிர்வாகம் ஆகிய அனைத்திலும் பயிற்சி அளிக்கப்படும். ஜீ. சீ. ஈ. (உயர்தரம்) பாட நெறிக்கேற்பவும் பயிற்சிகள் அளிக்கப்படும். வகுப்பு ஆரம்பம்: 15- 1- 80. செயலாளர், நாடக, அரங்கக் கல்லூரி, ''தாயகம்'' திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 4618

### வகுப்புகள்

LLB-First in Laws. சட்ட முதற் பரீட்சை 1980/81. கொழும்பு, யாழ். முன்னணி விரிவுரையாளர்களால் 5-1-80 தொடக்கம் நடாத்தப் படுகின்றது. அச்சடித்த குறிப்புகளுடன் முதல் மாத வகுப்புக்கு சகல மாணவர்களும் இலவசமாக சேர்த்துக் கொள்ளப்படுவர். Cantabia Institute 166, Hospital Road, Jaffna. 4630

### தேவை

நபர் சீல் செய்யுமிடத்தில், ஆங்கிலம் தெரிந்த (பெண்) உதவியாளர் தேவை. வயது முதலிய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். 'மேர்வின்ஸ்', 91/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 4643

### விற்பனைக்கு

J. K. விஸ்ரர் இஞ்சின் வாட்டக்கூல்,3 சிலிண்டர்46-5 H.P. இன்டஸ்ரியல். அவுறும்பிள்ளை பறுஞந்து, இல: 8, 2ம் குறுக்குத்தெரு, றெக்கிழமேசன், குருநகர், யாழ்ப்பாணம். 4656

### TO LET

Available immediately a compact Annexe partly furnished. Contact: 341, Columbuturai Road. 4658

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்- இலங்கை யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

இவ்வலுவலகத்திலுள்ளபின் வரும் பொருட்களை விற்பனவு செய்யக் கேள்விகள் என்னால் 1980-01-28ஆந் தேதி நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

1. பழைய செய்திப் பத்திரிகை
   ஏறத்தாழ 100 கிலோ (நன்னிலையில்)
   ஏறத்தாழ 175 கிலோ (பழுதடைந்த நிலையில்)
2. சீமெந்து வெற்றுறைகள்
   ஏறத்தாழ 700 வெற்றுறைகள்(நன்னிலையில்)
   ஏறத்தாழ 150 வெற்றுறைகள் (பழுதடைந்தநிலையில்)

உதவிப்பதிவாளர்
நிர்வாகம்

4655

யாழ். கட்டிடத்திணைக்களத்தைச் சேர்ந்த

# 500 சமயாசமய ஊழியர்கள் வேலை இழக்கும் நிலை!

(புலோலி)

யாழ். கட்டிடத் திணைக்களத்தில் பணியாற்றும் சமயாசமய ஊழியர்கள் 500 பேர் வேலை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாம்.

கட்டிடத் திணைக்களம் மேற்கொண்டுவந்த வேலைகளைத் தற்போது அரசாங்கம் கொந்தராத்து முறையில் விட்டுள்ளதால் தனியார் நிறுவனங்கள் கட்டிட நிர்மாணத்துறை வேலைகளை எடுத்துச் செய்து வருவதே இதற்குக் காரணமெனத் தெரியவருகிறது.

இதனைத்தொடர்ந்து யாழ், கட்டிடப்பகுதி ஐாதிக பொது சேவையாளர் சங்கச் செயலாளர் திரு. எஸ். சண்முகநாதன் இவ்வூழியர்களின் நிலை பற்றி விளக்கும் மகஜர் ஒன்றைப் பிரதமரும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான திரு. ஆர். பிரேமதாஸவுக்கு அனுப்பிவைத்துள்ளார்

அவர் தமது மகஜரில் வேலை இழக்கும் நிலையில் உள்ள 500 சமயாசமய ஊழியர்களும் எட்டுவருடகால சேவையைப் பூர்த்திசெய்துள்ளனர் என்றும் இவ்வூழியர்களுக்கு விமோசனம் அளிக்குமாறும் கேட்டுள்ளார். (அ)

......

## உடுப்பிட்டிக்கு மத்திய நூல் நிலையம்

((புலோலி)

கரவெட்டி வெல்லன் பிள்ளையார் கோவில் வீதிக்கு மின்னிணைப்புச் செய்யப்படவுள்ளது. இவ்வீதிக்கு மின்னிணைப்புச் செய்வதற்கென இந்த ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் 80,000 ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார்.

அத்துடன் உடுப்பிட்டியில் மத்திய நூல்நிலையமொன்றை அமைப்பதற்கும் எம். பி. பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் முதற்கட்ட வேலைகளுக்கென 50,000ரூப நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தொலைபேசி

(புளியங்குளம்)

கனகராயன்குளம் உபதபாற் கந்தோருக்கான தொலைபேசித் தொடர்பை இம்மாதம் 16-ந் திகதி வவனியா பாராளுமன்ற உறுப்பினர் திரு.தா.சிவசிதம்பரம் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இவ்விழாவில் நெடுங்கேணி உதவிஅரசாங்க அதிபர் திரு. எஸ். பாலசுந்தரம் சிறப்புரையாற்றுவார். இதுதொடர்பான சகல ஒழுங்குகளையும் கனகராயன்குளம் கிராமஅபிவிருத்திச்சங்கம் செய்துள்ளது. (அ)

### வலி.கிழக்குதென்பகுதி ப.நோ.கூ.சங்கம்

## வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திர அறிவித்தல்

ஷெ சங்கத்தில் வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. 1980-1-19 சனிக்கிழமை நண்பகல் 12 மணிவரை கேள்விப் பத்திர விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்களை 1980-1-17ம் திகதிவரை ஷெ சங்கக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விவிண்ணப்பப்பத்திரம் ஒன்று ரூபா 1/-ம் வைப்புப்பணமாக ரூபா 250/ம்செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக நிபந்தனைகளையும் விபரங்களையும் ஷெ சங்கக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் யாவும் ''பொதுமுகாமையாளர்,வலி-கிழக்குத் தென்பகுதி ப. நோ, கூ. சங்கம், நீர்வேலி'' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இக்கேள்விப்பத்திரம் சங்கத்தால் நிராகரிக்கப்படுவதற்கு உரிமையுண்டு. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் வெற்றுச்சாக்குகளுக்கான கேள்விவிண்ணப்பம் என எழுதப்படல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்
நீர்வேலி,
1980-01-11 4648

### வலி தென் மேற்கு தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், சண்டிலிப்பாய்.

## வெற்றிடம்

### பொது முகாமையாளர் தரம் 111

மேற்படி பதவிக்கான விண்ணப்பம் இலங்கை வாசிகளிடம் இருந்து கோரப்படுகிறது. விண்ணப்பங்கள் அண்மையில் செற்ற இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 26-01-80க்கு முன்னர் ''தலைவர், வலி தென் மேற்கு தெ. பு. பொ. உ. வி. கூ. சங்கம், சண்டிலிப்பாய்'' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**தகைமைகள்**

1. கூட்டுறவுப் பயிற்சி பெற்ற பட்டதாரி அல்லது
2. மூன்று வருட அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் தராதர (உயர்தர) பத்திரம் அல்லது
3. ஐந்து வருட கால அனுபவம் பொருந்திய முன்னைநாட் கூட்டுறவுப் பரிசோதகர் அல்லது
4. 20,00,000 வருடாந்த மொத்த விற்பனவாகக் கொண்ட வியாபாரத் தாபனம் ஒன்றில் மேல் முகாமைப் பதவியொன்றில் 3 வருட கால அனுபவம் உடைய ஒருவர்.

பிணை: காசுப்பிணை ரூபா 1700/-ம், காணிப்பிணை ரூபா 5000/-ம் கட்டப்பட வேண்டும்.

வயது: 23க்கும் 50க்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

வேதனம்: 340 - 590 / 15×10, 20×5

(சகல படிகளும் வழங்கப்படும்)

சங்க எல்லைக்கு உட்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

மேற்கொண்டு விபரங்கள் தேவைப்படின், 12-5-72 திகதிய 5009/6/12 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

இப்படிக்கு
ஒப்பம்
மா. சுந்தரசாமி,
தலைவர்.

4632

# 'தொல்புரம் ஆஸ்பத்திரிக்கு சகல வச திகளும் வழங்குக

### எதிர்க்கட்சி முதல்வருக்கு மகஜர்

(சுழிபுரம்)

எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் மூளாயிலுள்ள இல்லத்தில் வைத்து ஆயிரம் பேர் கையொப்பம் வைத்த மகஜர் ஒன்று நேற்று மாலை அவரிடம் கையளிக்கப்பட்டது.

தொல்புரம் அரசினர் வைத்தியசாலையைக் சகல வசதிகளும் நிறைந்த ஓர் வைத்தியசாலையாக ஆக்குமாறு கோரும் விபரங்களே அம்மகஜரில் குறிக்கப்பட்டிருந்தது. மகஜரை கையேற்ற திரு. அ. அமிர்தலிங்கம் மிகவும் சுலபமாக இவ்விடயத்தை முடிக்க முடியாது என்பதை எடுத்து விளக்கியதுடன் வைத்தியசாலை அபிவிருத்தி சம்பந்தமான சில சிறந்த ஆலோசனைகளையும் தெரிவித்தார், பொதுமக்கள் தாமாகக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்தால் மிகவும் சுலபமாக வைத்தியசாலை விஸ்தரிப்பைநிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற ஆலோசனையையும் தெரிவித்தார்.

தொல்புரம் அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த ஒன்பது நிர்வாக சபை உறுப்பினர்கள் மகஜர் கையளிக்கும் நிகழ்ச்சியில் பங்குகொண்டனர்.

"தொழிற்சங்கங்கள்

# தொழிலாளர் சுதந்திரமாகச் செயல்பட உதவவேண்டும்"

(மன்னார்)

தொழிலாளர் நசுக்கப்படுவதையும் சுரண்டப்படுதையும், தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் அநீதிகளைக்கண்டு போராடி தொழிலாளர்களைச் சுதந்திரமாகச் செயலாளர்களுக்கு வழங்கப்படும் அநீதிகளைக்கண்டு போராடி தொழிலாளர்களைச் சுதந்திரமாகச் செயல்படச் செய்யவே உலகம் முழுவதிலும் தொழிலாளர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு புலோலி ப. நோ. கூ. சங்கத்தின் கணக்காளர் திரு. சோ. அருணகிரி மன்னாரில் அயின் படமாளிகையில் நடைபெற்ற மன்னார்மாவட்ட கூட்டுறவுத்தொழிலாளர் சங்கம்நடத்தியகண்டனக்கூட்டத்தில் உரையாற்றினர். இக் இக்கூட்டத்தில் சங்கானைப் ப. நோ. கூ. சங்க கணக்காளர், தாய்ச்சங்கத் தலைவர் திரு. துரைசாமி, தாய்ச்சங்கச் செயலாளர் திரு. இராசேந்திரம், நிர்வாகசபை உறுப்பினர் திரு. கதிர்காமத்தம்பி மற்றும் அதிகாரிகளும் மன்னார் மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களின் ஊழியர்களும் இச்கூட்டத்தில் கலந்து கொண்டனர்

மாந்தை தெற்கு உயிலங்குளம் ப. நோ. கூ. சங்கத்தில் கடமையாற்றிய ஒருபெண்உட்பட மூன்றுஊழியர்களை வேலை நீக்கம் செய்து அவர்களுக்கு அநீதி விளைவித்து புதிய ஊழியர்களைத் தெரிவுசெய்தமையால் மேற்படி சங்கத்தின் இயக்குநர் சபைக்கு கண்டனம் தெரிவிக்குமுகமாகவே இக்கூட்டம் நடைபெற்றது.

மேற்படி இயக்குநர் சபையுடன் பேச்சுவார்த்தை மூலம் சமாதான முடிவை மேற்கொள்வது இயக்குநர்சபை சமாதானமுடிவுக்கு வராது விட்டால் தாய்ச்சங்கத்தின் உதவியுடன் போராட்டம் நடத்துவதென இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. [அ]

## புத்தூர் கிராம சபைக்கு நிரந்தரக்கட்டிடம்

[பண்டத்தரப்பு]

புத்தூர் மத்திய கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்கத்திற்கு நிரந்தரக்கட்டிடம் நிறுவுவதற்கென கோப்பாய்த் தொகுதி எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்திலிருந்து ஐயாயிரம் ரூபாவை ஒதுக்கீடுசெய்துள்ளார். இதனைத்தொடர்ந்து கட்டிட வேலைகள் ஆரம்பமாகியுள்ளது. (அ)

......

## திருக்கேதீஸ்வர சிவராத்திரிவிழா ஒழுங்குகள் பூர்த்தி

[மன்னார்]

அடுத்தமாதம் 14 திகதி திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் நடைபெறவிருக்கும் மகாசிவராத்திரிவிழாவில் கலந்து கொள்ளவிருக்கும் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களின் நலனுக்காக வசதிகள்செய்யும் முகமாக கூட்டமொன்றுநடைபெற்றது.

இக்கூட்டம் மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோ தலைமையில் மன்னார் கச்சேரியில் நடைபெற்றது.

கூட்டத்தில் இ. போ. ச, பொலிஸ், சுகாதாரப்பகுதி அதிகாரிகளும் மற்றும்பல பிரமுகர்களும், திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகசபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

......

## ஒரே சூலில் 6 குழந்தைகள்

((புளோரன்ஸ், இத்தாலி)

புளோரன்ஸ்ஸில் வதியும் பெண் ஒருத்தி கடந்த வெள்ளிக்கிழமையன்று ஆறுகுழந்தைகளும் உயிருடன் இருக்கின்றன என டாக்டர்கள் தெரிவித்தனர்.

நான்கு ஆண் குழந்தைகளையும் இரு பெண்குழந்தைகளையும் பெற்றெடுத்த ரேசன்னு கலிகிலி என்ற பெண் 35வாரங்களாக இக்குழந்தைகளைவைத்திருந்தார். இக்குழந்தைகள் ஒன்றுமுதல் இரண்டு கிலோ கிராம்வரை எடையுள்ளன.

......

## நெடுங்கேணியில் மக்கள்கடை

(புளியங்குளம்)

நெடுங்கேணிக் கிராமசபை எல்லைக்குட்பட்ட பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையான விற்பனைத் திணைக்களத்தின் மக்கள்கடையை கிராம சபையின் பொதுச்சந்தைக் கட்டிடத்தில்அமைப்பதற்கான நடவடிக்கைகளை கிராமசபை விசேஷஆணையாளரும் உதவி அரசாங்க அதிபருமான திரு. எஸ். பாலசுந்தரம் மேற்கொண்டுவருகிறார்.

வவனியாமாவட்ட விற்பனைத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் திரு. எஸ். நடராசா இக்கட்டிடத்தைப் பார்வையிட்டு மக்கள்கடை அமைப்பதற்கு ஏற்றஇடமென மேலிடத்திற்குச் சிபார்சு செய்துள்ளார் எனத் தெரியவருகிறது. [அ]

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

உயிரோடிருப்பவர்கள் மக்களுக்குத் தொண்டு புரிந்து மடிவதற்கே. உயிர் வாழவேண்டும். தொண்டிற்கு தொண்டு தான் வெகுமதி.

- அண்ணல் காந்தி

## மக்கள் கருத்து

### இலங்கை வானொலியும் இசைப்பரிசோதனையும்

இலங்கை வானொலியில் நிர்வாக மாற்றங்கள் வரும்போது புதிதாக வருபவர்கள் இசைப் பரிசோதனைகள் நடாத்துவதை ஒரு வழக்கமாகவே கொண்டிருக்கிறார்கள். இதுவரை எத்தனையோ தடவை மறு பரிசீலனைகள் நடந்துள்ளன. ஆனாலும் சமீபத்தில் இந்தியாவில் இருந்து ஒருவித்துவானை வரவழைத்துச் சகல பிரிவினர்களுக்கும், அதாவது கர்நாடக, மெல்லிசைக் கலைஞர்களையும் பரிசோதித்து, தரம்பிரிப்பதற்கு இசைப் பரிசோதனை நடாத்தினார்கள். எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு சிறந்த இசை மேதை வந்ததால் எமது நாட்டுக் கலைஞர்கள் சகலரும் மறுப்புன்றிப் பரிசோதனைக்கு சமூகமளித்தார்கள்.

முடிவுகள் இன்று வரும் நாளைவரும் என்று கலைஞர்கள் நாட்களை எண்ணிக் கொண்டிருப்பதுதான் மிச்சம். ஒன்றரை மாத காலம் கடந்தும் இன்னமும் முடிவுகள் வரவில்லை. காரணமும் புரியவில்லை. இனிமேலாவது அடிக்கடி மறு இசைப் பரிசோதனைகள் நடாத்துவதை நிறுத்தி ஏற்கனவே இருக்கும் கலைஞர்களுக்கு தகுந்த சந்தர்ப்பம் வழங்கி இசைத்துறைக்கு ஊக்கத்தை இலங்கை வானொலி அளிக்குமா?

**சு. தர்மசிங்கம்**
தலையாழி,
கொக்குவில்.

......

### சுத்தமாக இருந்தால் பரிசு

(யாழ்ப்பாணம்)

ரயில் நிலையங்களைச் சுத்தமாக வைத்திருந்தால் பரிசு வழங்க போக்குவரத்து அமைச்சு முடிவு செய்துள்ளது. இதுசம்பந்தமான அறிவுறுத்தல்களை ரயில்வே பகுதி மேற்கொள்ளும்.

முதபரிசு ரூ. 2500 இரண்டாம்பரிசு 1000 ரூபாவும் இந்திய இலவசப் பயணமும்.

மூன்று வலயங்களாகப் பிரித்து வெவ்வேறாக நாவலப்பிட்டி கொழும்பு அனுராதபுரம் என்ற அடிப்படையில் பரிசுகள் வழங்கப்படும்.

......

### ஆரம்பநீதிமன்றம்

(மன்னார்)

பேசாலை கிராமாட்சி மன்ற நூலகத்தில் ஆரம்பநீதிமன்றம் ஆரம்பித்துவைக்கப்பட்டது. அடுத்தவாரம் அடம்பனிலும் ஆரம்ப நீதிமன்றம் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஏற்கனவே மன்னாரிலும், முருங்கனிலும் ஆரம்ப நீதிமன்றங்கள் செயல்பட்டுவருகிறது.

......

### மயானத்துமண்ணையும் விடுகிறார்களா?

(மன்னார்)

பேசாலைபொதுமயானத்தில் பேசாலை மக்கள் கட்டடம் கட்டுவதற்கென மண்ணை வெட்டி எடுப்பதால் மயானம் பெரிய பள்ளமாகி வருகிறது. இதனால் சடலங்கள் புதைக்க முடியாத நிலை ஏற்படலாம் என பொதுமக்கள் அஞ்சுகின்றனர்.

# மனித நாகரிகத்தின் முதிர்வினை விளக்கிநிற்பதுபொங்கல்!

*நாளை தைப் பொங்கல் தினத்தையொட்டி இக் கட்டுரை இங்கு இடம் பெறுகிறது.*

வேட்டுவ நிலையிலிருந்து மறுமலர்ச்சியும் - நாகரிகமும் பெற்று உழவர் நிலைக்கு உயர்ந்தமை மனிதஇனத்தின் அறிவு மலர்சிக்கு வழிகோலியது. இனங்களின் வரலாற்றில் கண்மூடித்தனமான நம்பிக்கைகளினதும் செயற்பாடுகளினதும் தொடக்கம் முதல் இன்றைய நவீன யுகத்தின் ஆராய்ச்சி மதிநுட்ப வளர்ச்சி வரை ஒதோவொரு வகையில் வளர்ச்சி நிலையையும் நாகரிக நிலையையும் பெற்றுள்ளமையை நாம் கண்டுகொள்ளலாம்.

பொங்கல்விழா தமிழர்க்குரிய இந்துக்களுக்குரிய தனிப்பெரும்விழா. தமிழ்கூறும் நல்லுலகம் ஆண்டு தோறும் தைத்திங்கள் முதல்நாளிற் பொங்கல் விழாவைக் கொண்டாடி வருகிறது. மனிதப் பொருளாதார இயக்கங்கள் அவனுக்கு அளிக்கும் அறுவடையின் குறிப்பினைஇப்பொங்கல் திருநாள் விளக்கி நிற்கின்றது. பசுமைப் புரட்சியினால் தனியொரு குடும்பமோ அல்லது குழுநிலைக் குடும்பங்களோ தமது சுகஜீவனத்திற்காக எடுக்கும் சொந்த முயற்சியின் பலாபலனை நெஞ்சு குளிரக் கொண்டாடவெனத் திகழும் நாளே பொங்கல், உலகில் உணவுபோன்ற அத்தியாவசிய தேவைகளைப் பெறுவதற்காகவே மனிதன் பூமியில் போர்புரிகின்றான்: பூமியுடன் போர்புரிகின்றான். அந்த விளைவுப் போரினால் பெற்ற பெறுபேற்றினையும் அப்பெறுபேற்பேற்றினை நல்லமுறையில் தருவிக்க முற்றுவிக்க உறுதுணை புரிந்த இயற்கையையும் கௌரவித்து வணங்கும் ஒரு தினம்தான் தைப்பொங்கல் தினமாம்.

### தன்னியக்கவிச்சின் ஆட்சி முறைமை

அண்டசராசரங்களனைத்திற்கும் அக்கினிக்கோளத்தின்நிலையில் நின்று தெறிகிரணங்களால் உயிர்கொடுப்பவன் சூரியன். மானுடர்க்கும், பயிர்வகைக்கும் பல பயன்களைத் தருபவன் அவன். வாட்டல், நனைத்தல், வேர்த்தல் ஆகியன தோன்றுவதற்கும் மூலகாரணனும் அச் சூரியனே. பச்சைப் பசேலென விளங்கும் நெற்பயிருக்கு - அதன்விளைவுகாலங்களில்மழையையும்அறுவடைக் காலங்களில் வெயிலையும் கொடுப்பவன் சூரியன். ஆக்கலையும் - முதிர்வையும் - முடிவையும் தன் இயக்கத்தின் வீச்சினால் செய்துமுடித்து முறை செய்பவன்தான் அச் சூரிய பகவான். இச்செயல்களை யாரேனும் அவனிடம் கேட்டுப்பெற்றிலோம். அவனது இயல்புக்குணமே வாழ்விப்பது தான். அவ்வாழ்விப்புக் கடவுளுக்குரிய தினமாகவே பொங்கலையும் சுட்டுவது பொருத்தமுடையதாகும்.

### பொங்கல் விழா பல்தேவைகளின் கூட்டு

பொங்கல் தினமானது பல் வகைகளிலும் புதிய வழிவகைகளையும், சம்பிரதாயங்களையும், வாழ்க்கை வழிகளையும் கண்டு கொள்ள வகைசெய்யும் ஒன்றாகும். வீட்டினிலே என்றும் மங்கலதீபம் ஏற்றக்கூடிய வகையில் நிலை[illegible] வேண்டுமென்றும், மாதர்களெல்லோரும் மஞ்சட்குங்குமம் என்றும் ஒளிவீச இருக்க வேண்டுமென்றும், இறைவனுடைய திருவருளானது மனிதக் காரியங்களுக்கெல்லாம் துணை புரியவேண்டுமென்றும், செல்வம் பெருகவேண்டுமென்றும், நீதியும், மாண்பும், அறமும், திறமும் வளரவும் பொங்கலை ஒரு கால்கோல் விழாவாகவே தமிழர்கள் கொள்ளுகின்றனர். பல்வேறு வகைப்பட்ட வேண்டுதல்களையும் பொங்கல் திருநாளோடு இணைத்துக் கொண்டு சிறப்பாகக் கொண்டாடப்படும் இவ்விழாவிலும், அதன் பின்னரும்.

''ஒற்றுமையுள்ளம் பெறவே
அன்புப் பொங்கல் பொங்குகவே
சுற்றம் வாழச்செயல்கள்புரியப்
பொங்கல் பொங்குகவே
கற்றறி கண்ணிய மிகவே
தெரியப் பொங்கல் பொங்குகவே.
இற்பெருவாழ்வி னினிமை
பெறவே இன்பம் பொங்குகவே''

என வாழ்த்திப் பாடுகின்றார் தெல்லியூர்க் கவிஞர் நா. ஆறுமுகம்.

### முரட்டுக் காளையை வென்று கன்னியை வரிக்கும் போர்

உழவர் விழா எனச் சிறப்பிக்கப் படும் பொங்கல் விழாவையொட்டிய நாட்களில் பண்டைக் காலந்தொட்டு ''ஏறுதழுவல் விழாக்'' கொண்டப்பட்டு வருகிறது. உழவனுக்கு ஏரும் ஏறும் மிகமுக்கியமான

### மணநெறிக்குப் புயவலி

ஓடிவரும் முரட்டுக் காளைகளின் எதிரே அஞ்சா நெஞ்சத்துடன் சென்று, அவற்றின் கொம்புகளைப் பிடித்து அவற்றின் தலையை வளைத்து அவற்றைச் சாயவைத்துத் தம் வீரத்தை நிலைநாட்டுவதிலே வீர இளைஞர்கள் ஆர்வம்காட்டினர். அப்படி வீரத்தை நிலைநாட்டும் இளைஞர்களையே தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்து கொள்வது என்பது பண்டைத் தமிழ்மறக்குடி மக்களின் பண்பாக இருந்தது. மிதிலையில் சீதையைத் திருமணம் செய்யக்கூட இராமன் வில்லினை உடைக்கவேண்டும் என்ற தகைமையையும் பொருத்தி இயைபு காணுதல் தகும். ''எடுத்தது கண்டனர் இற்றது கேட்டனர்'' என்பான் கவிச்சக்கரவர்த்தி கம்பன்.

### திருமணத்தேவையன்று வீரயுகமுகறைமை

ஏறுதழுவும் வீரவிளையாட்டில் விடுவதற்கென்றே பலர் முரட்டுக்காளை முரட்டுத் தனத்தோடு வளர்த்து வந்தனர். அவற்றை அடக்கிக் குறிப்பிட்ட பெண்ணை மணம்புரிய இளைஞர்கள் துடியாய்த் துடித்து காளையை அடக்கிக் கன்னியை மடக்க முன்வருவதுண்டு. காளையை அடக்கிக் கன்னியைப் பெறுவது என்றநிலைமை நாளடைவில் மெல்ல மெல்ல மாறிப்

**க, நாகேஸ்வரன் பி. ஏ. (சிறப்பு)**

கருவிகளாகப் பயன் பட்டு வந்தன. உழவன் அறுவடையின்பின் புத்தம் புதிய நெல்லரிசியைக் கொண்டு புதுப்பொங்கலிட்டு விழாக் கொண்டாடிய வீரத்தமிழன் வலாற்றில் வலிமை மிக்க முரட்டுக்காளைகளை ஓடவிட்டு அவற்றைப் பிடித்து அடக்குவது என்பது அவ் ஆடவரின் ஆண்மைக்கும் சிறப்புக்கும் எடுத்துக்காட்டாகக் கொள்ளப்பட்டது.

### மிருகக் காளையும் மனிதக் காளையும்

வலிமையும் முரட்டுத் தன்மையும்கொண்ட காளை மாட்டை, வீரமகன் ஒருவன் (காளை) பிடித்து அடக்கிக்காட்டும் விளையாட்டையே 'ஏறுதழுவல்' என்று சங்ககாலத் தமிழ்மக்கள் அழைத்தனர். அதனை இக்காலத் விமிழக மக்கள் ''மஞ்சி விரட்டு'' 'மஞ்சு வெருட்டு' காளைப் போர்' 'சல்லிக்கட்டு' 'மாடுபிடி 'எருதுபிடி' என்று பல பெயரால் ஆங்காங்கு குறிப்பிடுகின்றனர். சங்க இலக்கியம்கூறும் வீரமகன் தனது புறக்கடமைகளுள் ஒன்றாகக் 'களிறெறிந்து பெயர்த்தல்' என்பதைக் கொள்ளவேண்டும். அதுகுலக் கடமையாக விதிக்கப்பட்டிருந்ததென்பது தெரிகின்றது. வீரயுககாலத்தின் விறல்மிகு போராளியாக விளங்கிய இளைஞன் தான் பொங்கல் விழாக் காலங்களில் தனது வீரார்த்த ஆண்மையைக்காட்ட ஏறுதழுவுகிறான்.

### உழவர் சமுதாயம்

தமிழ்மக்கள் நீண்ட காலமாகவே உழவுத் தொழிலில் ஈடுபட்டு அதனைச் சிறப்பாகப் போற்றிக்காப்பாற்றி வந்துள்ளனர். ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'' என்ற குறளோடு ஒத்த பிறகுறள்களும், ''மேழிச்செல்வம் [illegible] [illegible] ஐ'' என்றெல்லா சான்றோர் புகழ்ந்துரைத்துள்ளனர்.

காளையை அடக்கி அதன் கழுத்திலே கட்டப்படும் பரிசுப்பொருளைப் பெறுவது என்றநிலைமை இப்பொழுது ஏற்பட்டுள்ளது. தமிழகத்தின் தென் மாவட்டங்களில் இப்பொழுது ஏற்பட்டுள்ளது. தமிழகத்தின் தென் மாவட்டங்களில் இப்பொழுதும் காளைமாடுகளை அவற்றிடம் முரட்டுத் தன்மைவாய்க்கும்படி வளர்த்து வருகின்றனர்.

மாடுபிடிக்கும் விழாவின் போது மாட்டின் கழுத்தில் கட்டப்படும் பரிசு வளையத்தைச் ''சல்லி'' அல்லது ''சல்லிக்கட்டு'' என்று அழைக்கின்றனர்.

### மாடும் வெல்லும்

மாடுகள்விதம்விதமான வண்ணங்களால் அழகுபடுத்தப்பட்டிருக்கும். மாட்டினை அவிழ்த்து விடும்போது தகரத்தைத்தட்டியோ அல்லது சேமக்கலத்தை அடித்தோ அல்லது பறையை அடித்தோ ஓசையை எழுப்பி மாட்டினை வெருண்டோடச்செய்வர் மாடுவெருண்டு ஓடும்போது இளைஞர்கள் அதனை அடக்க அதன்முன்னால்பதுங்கிப்பதுங்கி பாய்ந்து வருவர் யாருக்கும் பிடிபடாமல் மாடு தொழுவத்திற்குத் திரும்பிவந்துவிட்டால் அப்பொழுது அந்த மாடு வெற்றி பெற்றதாகக் கொள்ளப்படும்.

### சிலநாடுகளில் மாடுபிடி

தமிழகத்தில் ஏறுதழுவும் வீரவிளையாட்டு இருந்துவருவதுபோல மேலைநாடுகளில் காளையோடு போரிடும் வீர விளையாட்டு நீண்ட நெடுங் காலமாக இருந்துவருகிறது.

காளையைப்பிடித்து அடக்குவது என்பது காளை தழுவலின் நோக்கமாகும். மேலை நாடுகளில் காளையோடு போரிட்டுக் காளையைக் கொல்லுதல் காளைப்போரின் நோக்கமாகும். பண்டைய கிரேக்கர்களும் உரோமானியர்களும் காளைப்போரில் சிறப்பாக ஈடுபட்டு வீரப்புகழை நிலைநாட்டுவதில் நாட்டம் கொண்டிருந்தனர். மத்தியதரைக் கடலில் கிரீட் என்னும் தீவில் காளைப்போர் விளையாட்டு மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது. ஸ்பெயின் போர்த்துக்கல் மெச்சிக்கோ போன்ற நாடுகளில் காளைப்போர் முக்கியமான தேசியப் பொழுது போக்கு விளையாட்டாக நடத்தப்பட்டு வருகிறது.

### அரங்கும் போரும்

காளைப்போர் விளையாட்டு நடத்துவதற்குத் தனி அரங்கம் அமைக்கப்படும் வேடிக்கை பார்க்க வரும் மக்கள் உயர்ந்த படிமேடைகளில் அரங்கைச்சுற்றி அமர்ந்திருப்பர் காளைப்போர் நடக்க நடுவே போதுமான இடம் விடப்பட்டிருக்கும். காளைகள் அரங்கின் ஒரு பக்கத்தேயுள்ள தனித்தனி அறைகளில் அடைக்கப்பட்டு இருக்கும்.

ஏறுதழுவுதல் தமிழகத்து வீரவிளையாட்டு என்றால் ஏறுபொருதல் மேலைநாட்டு வீர விளையாட்டு எனலாம்.

'மாடு' பொங்கலில் பெறும் முதன்மை ஸ்தானத்தாலேயே 'பட்டிப்பொங்கல்' மாட்டுப்பொங்கல் என்ற ஒன்

(6-ம்பக்கம்பார்க்க)

## நாடும் நடப்பும்

சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த ஒரு அம்மையார் சில தினங்களுக்கு முன் இறந்து போனார். ஈமக்கிரியைகள் நடைபெற்று முடிந்ததும் புதிய சேலையொன்று அவரின் பூதவுடலுக்குப் போர்த்தப்பட்டது. பூதவுடல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படுவதற்கு அவர் அணிந்திருந்த ஆபரணங்கள் யாவும் கவனமாகக் கழற்றப்பட்டன. மூக்குத்தியைக் கழற்றவேண்டாமென்றும் அதனுடனேயே தகனம்செய்ய வேண்டுமென்றும் சொல்லிவிட்டார்கள்.

மயானத்தில் பூதவுடல் தகனம் செய்வதற்குமுன் பூதவுடலுக்குப் போர்த்தப்பட்டபுதிய சேலையைச் சலவைத் தொழிலாளி எடுக்க எத்தனித்தார். ''சேலையை ஒருவரும் தொடக்கூடாது அது அப்படியே இருக்கவேண்டும்'' என்றுசொல்லி விட்டார்கள்.

''கட்டாடி அந்தச்சேலையை எடுத்தால் அது விலைக்குப் போய்விடும். யாராவது அநாதைப் பெண்களுக்கு அதைக் கொடுத்தால் அந்தப் பெண்ணின் மனப்பூர்வமான வாழ்த்துக் கிடைக்கும்'' என்று ஒரேயொரு குரல் ஒலித்தது. ஆனால் அந்தச் சேலையை ''யாரும் தொடக்கூடாது'' என்று எழுந்த பல குரல்களுக்குள் அநாதைக்கு அந்தச்சேலையைக் கொடுக்கலாமென்று ஒலித்த குரல் அடங்கிப் போய் விட்டது.

பூதவுடலுடன் அந்தப் புதுச் சேலையும் மூக்குத்தியும் அக்கினிக்கு அர்ப்பணமாகும்வரை சிலர் மயானத்தை விட்டே போகவில்லை.

ஃ ஃ ஃ

மணவிழா, மரணச்சடங்கு, கோயில்திருவிழா போன்ற வைபவங்களில் பெருமைக்காகவும் போலிக் கௌரவத்துக்காகவும் அறியாமையாலும் வீண்செலவு செய்வது நமது சமுதாயத்தில் ஊறிப்போன ஒரு பழக்கமாகிவிட்டது. விடுதலைபெறுவதென்றால் முதலில் சமுதாயம் அறியாமையிலிருந்தும் வறுமையிலிருந்தும் விடுதலைபெறவேண்டும். சமுதாய சீர்திருத்தத்தில் இளைஞர்கள் இனியும் காலம்கடத்தாமல் ஈடுபடவேண்டாமா?

**--ஊர்சுற்றி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைக்கிள் சாதனையில் இளைஞன் நஸீர்

எச்சி

மாலைநேரம், காலிபேஸ் திடல் வழமைபோல் இளைஞர்களும், யுவதிகளும் நிறைந்து காணப்படுகின்றது. கடமை முடிந்து மாலை நேரத்தை உல்லாசமாகக் கழிக்க மக்கள் நிறைந்து காணப்படுகின்றனர்.

''இது புதிய முயற்சி, நீண்ட தூரத்தை வீர இளைஞன் ஒருவன், சைக்கிளில் பின்னேக்கி ஓடி, வலம்புரிசாதனை செய்யவிருக்கிறுன். இவன் யாருமல்ல, முன்னைய ருவிஸ்ட் நடனவீரன் ஜனுப் பரீத்நஸீர் தான். இவனது முயற்சியைக் கொழும்பு மாவட்ட அமைச்சர் திரு. வீரசிங்க மல்லிமாராச்சி ஆரம்பித்துவைப்பார்''

கொழும்புநகரில், தனித்தமிழில் ஒலிபெருக்கி விளம்பரத்தைக் கேட்ட பலர் வாகனத்தின் பின்னுல் ஒரே ஜனத்திரள், பலருக்குத் தமிழ்தெரியாத காரணத்தினுல், என்ன? என்ன? என்று வினவுகின்றனர்.

மீண்டும் சிங்களத்தில் அதே விளம்பரம். காலிபேஸ் திடலெங்கும் முடியுமா? ஏதோ கஷ்டகாலமாக்கும் எனச் சிலரது கிண்டல், பலர் அவனது முயற்சி வெற்றிபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றனர். பத்திரிகையாளர் அவனைச் சந்திக்க முன்னிற்கின்றனர். அவனே எவ்விதசலனமுமின்றிக் காலிபேஸ்திடலில் காற்று வாங்க வந்தவன் போலத் தன்னை மறந்து நின்று தனக்குள் குதூகலிப்புப் பெற்றுச் சந்தோஷிக்கிருன்.

கடிகாரம் 4-29 காட்டியது. 4-30 க்கு வருவதாக இருந்த கொழும்பு மாவட்ட அமைச்சர் வீரசிங்க மல்லிமாராய்ச்சி சமுத்திரா ஹோட்டல் முன்னுல் வந்திறங்குகிருர். உங்கள் எம். பி. வரவில்லையா என்றவாறு வந்த மாவட்ட அமைச்சரை வரவேற்பாளர்கள் வரவேற்கின்றனர். அங்குமிங்கும் சிதறிக்கிடந்த மக்கள்கூட்டம், சமுத்திரா ஹோட்டல் முன்னுல் நிரம்பி வழிந்தது.

''மாவட்ட அமைச்சர்உரையாற்றுகின்ருர்: ''நஸீர் எனக்கு பழைய நண்பர், யாழ்ப்பாணத்தில் ருவிஸ்ட் நடனம் ஆடிக்கொண்டிருந்த போது அவரை வாழ்த்தியிருக்கின்றேன். வலம்புரிசாதனையிலும், நிச்சயம் வெற்றிபெறுவார். வெற்றியை எனக்கு உடனே அறிவித்துவிடு'' என்றவாறு, கரகோஷத்தின் மத்தியில், அந்த வீரனை, காலிபேஸ் திடலில் வைத்து மாவட்ட அமைச்சர் அனுப்பி வைக்கின்ருர், நஸீர் அமைச்சருக்கு கையசைத்த வண்ணம் புறப்படுகின்ருர்.

காலிபேஸ் திடலில் நின்ற அனைவரும் அவனையே வைத்த கண் வாங்காது உற்றுநோக்கியவாறு மறந்து நிற்கின்றனர். நிமிடத்துக்கு ஒரு வாகனம் செல்லும் கொழும்பின் பிரதான வீதிகளில், பொலிசார் வாகனத்தைக் கட்டுப்படுத்தி பாதையை விலக்கிக் கொடுக்கின்றனர். அறிவிப்பாளரது வாகனம் பின்னுல் அவதானித்துக்கொண்டு செல்கின்றது.

நகரின் ஒவ்வொரு வீதிகளிலும் நஸீர் செல்கின்ருர். பார்க்குமிடம் எங்குமே சாரி சாரியாக மக்கள் திரண்டு காணப்படுகின்றனர். பயங்கரமான வீதிகளில் அவன் செல்கிருன். எந்த வீதியில் எது நடக்குமென்று சொல்லமுடியாது. அந்த வீதிகளின் மண்ணில் அவன் மிகவும் துணிச்சலுடன் முன்னேறுகின்ருன்.

ஆனுல் பார்ப்போர் அனைவரும் அவனையே மனதாரத் திட்டித் தீர்க்கின்றனர். அவனே எதற்கும் அஞ்சாது, சென்றுகொண்டேயிருக்கிருன்.

மாலையும், காசும் கூட வரவேற்கின்றது. நஸீரோ பெகலிய கொடையைத் தாண்டிச் செல்கிருன்; நூற்றுக்கணக்கான சைக்கிள் இளைஞர்கள் அவன் பின்னுல்வந்து சோகின்றனர். ஓடிக்கொண்டே உணவருந்துகிருன், உரையாடுகிருன், வலம்புரி பற்றிச் சிந்திக்காத சிங்கள நண்பர்களும், வருவோர்போவோரையெல்லாம் புதினம் கேட்கின்றனர்; உசாவி நிற்கின்றனர்.

நஸீர் நீர்கொழும்பை அடைந்ததும் அவனுக்குப் பொலிஸ் பாதுகாப்பில்லை, வாகனங்களைக் கட்டுப்படுத்த முடியாத பயங்கரநிலை.

சில நிமிடங்கள், வீதியி பயங்கரவிபத்து, நஸீரின் சைக்கிளை முன்பகுதி முற்ருக சேதமாகியது. நஸீருக்கும் சிறியகாயம். மற்றச்சைக்கிளை கொண்டுவாருங்கள்என அவன் அழைக்கின்ருன். பிறிதொரு சைக்கிளில் அவன் தொடர்ந்து வலபுரிச்சவாரி.

அறிவிப்பாளருக்கு மனக்கலக்கம் மாறுவதற்கு முன்னுல் அவன் மீண்டும் வலம்புரிச்சவாரி. இப்படியாகஅவன் வலம்புரி சாதனை செய்கின்ருன்.

வழியிலேவந்த யாழ்ப்பாண லொறி, அந்தச் சைக்கிளை எடுத்துச்சென்று. புத்தளத்தில் திருத்திக் கொண்டு வந்து கொடுக்கின்றது,

அவன் சாதாரணமாக ஒன்பது மைல் கணக்கில் மணித்தியாலத்திற்கு சென்றவன் விபத்து நடந்தபின்னர் உயிரையும் மதியாது 15 மைல் கணக்கில் செல்கிருன் விரைவாக சிலாபம் மாதம்பையைக்கடந்து புத்தளத்தைக் கடக்கிருன்.

அதிகாலை 4 மணி
ஊர்உறங்கும் வேளை.

அல்லாவை நினைத்துத் தொழுகையை நிறைவேற்றுவதற்த பள்ளிகளுக்கு வந்த ஜனத்திரள் புத்தளம் நகரை முற்றுகையிடுகின்றது.

அவன் நகரை வலம் வருகின்ருன். 'அல்லாவின் ஆசி' உனக்கு நிச்சயம் கிடைக்கும் எதற்கும் அஞ்சாதே என வாழ்த்துக்கூறும் வீர ஒலிகள் புத்தளம் நகரை அதிரவைக்கின்றன.

புத்தளம் நகைக்ரகடந்து அனுராதபுரம் வீதிகளில் அவன் செல்கிருன் ஏற்ற இறக்கமான பயங்கரப்பாதைகள் அவனுக்கு பாதுகாப்பளிக்க பலவாகனங்கள் அவன் முன்னைய வேகத்தைக் காட்டிலும் விரைவாக கூட்டு வழிகளில் செல்கிருன் அவன் அஞ்சவில்லை.

சரியாக பகல் 12.00 மணி அனுராதபுரம் வந்தடைகின்ருன் அனுராதபுரம் நகர்களில் அவனுக்கு வரவேற்பு வெகுமதிகள் ஏராளம் பத்துப் பதினைந்து மோட்டார் சைக்கிள்கள் வெற்றி ஊர்வலம்.

மதவாச்சியில் அவனுக்கு அடுத்த காண்டம். மலவாயில் சதை வெடித்து செங்குருதி பாய்கிறது அவன் வேகத்தை குறைத்தானும் இல்லை. வீதிகளில் வெற்றிப்புன்னகை முதலுதவியாக நீண்டபிளாஸ்டர் அவனது குளிர்ந்த சதைக்கு உரமூட்டுகிறது.

மாலை 7-00 மணிக்கு தமிழ் மண்ணில் அவன் பிரவேசிக்கின்ருன். வவனியா சென்றுவிடுகிருன். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அவனை அழைத்துச் செல்ல காத்திருக்கின்றனர்.

லொறிகளில் மோட்டார் சைக்கிள்களில் சைக்கிள்களில் மோட்டார்கார்களில் இளைஞர்கள் எப்போது வவனியா வருவீர்கள் எனகேட்டவர்கள் நஸீரைக்கண்டதும் வெடிகள் கொழுத்தப்படுகின்றன.

தொடர்ந்து தமிழ்ப்பகுதி எங்கும் பவனிவந்து சரியாக காலை 8-15 க்கு அவன் மாநகரசபை முன்றலை அடைகின்ருன் அவனை மாநகரசபை ஆணையாளர் திரு. க. சிவஞானம் ''உலக சாதனை முயற்சியை யாரும் செய்யாத முயற்சியை வெற்றிகரமாக நிறைவேற்றித் தமிழ் மக்களை ஆனந்தக்களிப்பில் ஆழ்த்திவிட்டார் என வாழ்த்துகிருர்.

அவன் 270 மைல்களை வலம்புரி சாதனை செய்து புதிய சாதனையை நிலைநாட்டிய பெருமையில் திளைக்கின்ருன்.

அவனை வீரஇளைஞர்கள் நகர்வீதிகளில் ஊர்வலமாக அழைத்துச் செல்கின்றனர்.

---

உணவுமுத்திரை:

## நெடுங்கேணி உ அ அதிபர் நடவடிக்கை

புளியங்குளம்)

உணவுமுத்திரை விநியோகம் தொடர்பான பகிரங்க விசாரணை நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பாலசுந்தரம் தலைமையில் சகல கிராமசேவை அலுவலர் பிரிவுகளிலும் இம்மாதம் 22-ம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் உணவு முத்திரைக்கு விண்ணப்பித்துக் கிடைக்கப்பெருதவர்கள் தாங்கள் உணவு முத்திரை பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் என்பதை நிரூபிப்பதற்கும் உணவு முத்திரை ஏற்கனவே பெற்றிருப்பவர்கள் அம்முத்திரை பெறுவதற்குத் தகுதியற்றவர்களெனச் சுட்டிக் காட்டப்பட்டிருப்பின் அதனை நிரூபிப்பதற்கும் சகல கூட்டுறவுச் சங்கக்கிளையைச் சேர்ந்த நுகர்வோருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

இவ்விசாரணைகளே உணவு முத்திரை பெற்றவர்கள் தொடர்ந்து வைத்திருப்பதற்கும், உணவுமுத்திரை பெறுவதற்குத் தகுதியுடையவர்களுக்கு உடனடியாக வழங்குவதற்கும் அரசாங்கத்தால் வழங்கப்படும் கடைசிச் சந்தர்ப்பமாகும். ஆதலால் உணவு முத்திரை தொடர்பான முறைப்பாடுகள் எதுவும் இருப்பின் இக் கடைசிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உதவி அரசாங்க அதிபர் சகல பொதுமக்களையும் வேண்டியுள்ளார்.

நெடுங்கேணி, குளவிசுட்டான், ஒட்டிசுட்டான் ஆகிய கிராமங்களுக்குரிய விசாரணை உதவி அரசாங்க அதிபரின் பணிமனையிலும் ஏனைய கிராமங்களுக்குரிய விசாரணைகள் கிராமசேவை அலுவலர் பணிமனைகளிலும் நடைபெறும் என்று தெரியவருகிறது. (அ).

---

# மூடும் நிலையில்

## கைத்தறி நெசவு நிலையம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத்தொகுதியிலுள்ள பலநோக்குக்கூட்டுறவுச்சங்கமொன்றினுல் நீண்டகாலமாக நடாத்தப்பட்டு வரும் கைத்தறி நெசவுநிலையமொன்றை விரைவில் மூடுவதற்கு சங்க நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுவருவதாகக் கூறப்படுகிறது.

இந்த கைத்தறி நெசவு நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறிப் பிடவைகளையும் மற்றும் துவாய், பெட்சீற் போன்றவைகளையும் விற்பனை செய்யமுடியாது சங்கம் திண்டாடுவதாகவும் வெளிநாட்டு இறக்குமதி ஆடைகள்மீது மக்கள் கவனம் திரும்பியுள்ளதினுல் இந்தக் கைத்தறி ஆடைகளை வாங்க எவரும் முன்வருவதில்லை என்றும் இதனுல் தொடர்ந்தும் ஏற்படும் நஷ்டத்தை மேற்படி சங்கம் தாங்கிக்கொள்ள முடியாது இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இக்கைத்தறி நெசவுநிலையத்தை மூடுவதினுல் இங்கு கடமையாற்றும் நெசவு ஆசிரியை உட்படப் பல இளம் பெண்கள் வேலைஇழக்கவேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்படுமென்றும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

......

### மானிப்பாய்த் தொகுதி மீனவர் இளைப்பாற......

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய்த் தொகுதி மீனவர்களின் நலன்கருதி காக்கை தீவு, நாவாந்துறை ஆகிய இடங்களில் இரு மீனவர் இளைப்பாற்று மண்டபங்களை விரைவில் நிறுவுவதற்கு மானிப்பாய் கிராமசபை விசேட ஆணையாளரும் வலிதெற்கு உதவி அரசாங்க அதிபருமான திரு. ஏ. செபநாயகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

(அ)

......

## முல்லைத்தீவு டிப்போ

### புதிய பஸ் சேவை

(புளியங்குளம்)

மாரு இலுப்பையிலிருந்து குறிசுட்ட குளம் வரையிலான பஸ்சேவையை ஆரம்பிப்பதற்கு முல்லைத்தீவு மாவட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபை அத்தியட்சகர் சம்மதம் தெரிவித்துள்ளார். இவர் அண்மையில் இப்பாதையூடாகப் பரீட்சார்த்த பஸ் சேவையை நடாத்தியதன் மூலம் இச்சேவைக்கு அங்கீகாரம் அளித்துள்ளார் என அறியவருகிறது. (அ)

......

## சங்கீதசபைக்கு நிரந்தரக் கட்டிடம்

(வேலணை)

வட இலங்கை சங்கீதசபை தமக்கென நிரந்தரக் காரியாலயக் கட்டிடமொன்றினை கட்ட முடிவுசெய்திருக்கின்றனர்.

மேற்படி கட்டிடத்தைக் கட்டுவதற்கு யாழ்ப்பாணம் முத்திரைச்சந்தைக்கு அருகாமையிலுள்ள நிலமொன்றினைத் தெரிவுசெய்திருப்பதாகவும் இக்கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல்நாட்டுவிழா வெகு விரைவில் நடைபெறவிருப்பதாகவும் தெரியவருகிறது,

(அ)


களைகளை ஒழிக்கச் சிறந்த வழி
பவர்ஸ் எம்.சீ.பீ.ஏ.40

கமக்காரரே! உங்கள் வயலில் நெற்பயிரைப் பாதிக்கும் அகன்ற இலை களைகளையும் புதர்ச் செடிகளையும் கிடச்சி, நீர்முள்ளி, மும்மூட்டுக்கோரை, சந்தனக்கோரை ஆகியவற்றையும் கட்டுப்படுத்த, விதைத்து அல்லது நாற்று நட்டு 21 - 35 நாட்களுள் பவர்ஸ எம்.சீ பீ.ஏ. 40 பாவியுங்கள்.




இறக்குமதியாளர்கள்:
ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
62, ஜேத்தவன வீதி, ஜோன்ட்பாஸ்,
கொழும்பு 14.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## "யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் பயின்று

# தராதரப்பத்திரம் பெற்றவர்க்கு வேலைவாய்ப்பு வழங்குக"

(புலோலி)

யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் பயின்று உயர் கணக்குப் பதிவாளர்களுக்கான வணிக தகுதிப்பத்திரம், தொழில் கற்கைகளிலான தேசிய தராதரத்பத்திரம்பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பளிப் தற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் கோரப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமான மகஜர் ஒன்றை யாழ் பல்தொழில் நுட்ப நிறுவனத்தின் முன்னாள் வணிக மாணவ மன்றத்தின் செயலாளரும் இந்து மாணவ மன்றத்தின் உப-தலைவருமான திரு. ஏ. என். எஸ். திருச்செல்டும், யாழ் பல்தொழில் நுட்பக்கல்லூரியில் பயின்று வேலையற்றிருக்கும் வணிக தகுதிப் பத்திரம் பெற்றோர் சார்பில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ளார். அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இந்த பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் பயின்றவர்கள் ஆறு வருடங்களுக்கு மேலாகத் தகுதிப்பத்திரங்களைப் பெற்று இருந்தும் அரசாங்கத் திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் பதவி நியமனங்கள் வழங்கப்படாது புறக்கணிக்சப்பட்டு வருகின்றனர். சமீபத்தில் பொது நிர்வாச உள் நாட்டலுவல்கள் அமைச்சின் இணைந்த சேவைகள் பகுதியில் அரசாங்க கணக்குப் பதிவாளர் சேவைக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டது. இப்பதவியில் யாழ்-பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் பயின்று தகைமைச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளவர்களுக்கு நியமனம் வழங்கிவிமோசனம் அளிக்க வேண்டும்.

1976-ம் ஆண்டு இப்பதவிக்கு நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் பயின்று உயர் வணிகத் தகுதிச் சான்றிதழ்கள் பெற்றவர்கள் எவருக்குமே நியமனம் கிடைக்கவில்லை.

இம்மகஜரின் பிரதிகள் கல்வி உயர்கல்வி அமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்தின் கல்விச் சேவைகள் அமைச்சர் திரு. லயனல் ஜயதிலக, பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. மொண்டேகு ஜயவிக்கிரம, இளைஞர் விவகார வேலைவாய்ப்பு அமைச்சர் திரு. ரனில் விக்கிரமசிங்க, யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயகோன் மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமி, வட பிரதேச ஐக்கிய தேசியக் கட்சிப் பிரதம அமைப்பாளர் திரு. கே. கணேசலிங்கம் யாழ் மாவட்ட வேலை வழங்குக் குழுத்தலைவர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ)

# கீரிமலையில் 20 வீடுகள்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைத் தொகுதியைச் சேர்ந்த கீரிமலையில் 20 வீடுகள் அமைக்கப்பட்டு வீடற்ற ஏழைமக்களுக்கு வழங்கப்படவுள்ளது.

தொகுதி ரீதியான வீடமைப் புத்திட்டத்தின்கீழ் காங்கேசன்துறைத்தொகுதியில் ஏற்கனவே வீமன்காமத்தில் 5 வீடுகளும், பல்லாகத்தில் 10 வீடுகளும் அமைக்கப்பட்டு 20 வீடுகளை அமைக்க இடம் தெரிவுசெய்வதில் பிரச்னை இருந்துவந்தது.

தற்போது இந்த 20 வீடுகளையும் அமைக்க கீரிமலையில் இடம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தை வீடமைப்பு இலாகா அதிகாரிகள் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இந்த வீடுகளைப் பெறவிரும்புபவர்கள் விண்ணப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

# ஈழத்தமிழர் பண்பு பற்றி

## தமிழகப் பேராசிரியர் பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

''காரைநகர் மணிவாசகர் சபையினரின் மணிவாசகர் விழாவில் கலந்து கொள்வதற்காக ஈழத்திற்கு வருகைதந்த எனக்கும் எனதுதுணைவியாருக்கும்தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற பல்வேறு இடங்களையும் சுற்றிப்பார்க்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தது. இச்சந்தர்ப்பத்தில் நானும்துணைவியாரும் இங்கு சைவத்தமிழ் மக்களோடு கலந்துறவாடியபோது அவர்களிடத்துக் காணப்படுகின்ற தமிழ் ஆர்வம், கரைபுரண்டோடுகின்ற பக்தியுணர்வு என்பனவெல்லாம் எம்மைப் பிரமிக்கச்செய்தன'' என்று காரைநகர் மணிவாசகர் விழாவில் கலந்துகொள்ள வருகைதந்த தருமை ஆதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் இரா. செல்வக்கணபதி, தாயகம்திரும்புவதற்கு முன்பாகப் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியில் தெரிவித்தார்.

பேராசிரியர் மேலும் தெரிவித்ததாவது:

''இலங்கைத் தமிழ் நாளேடுகளும், வானொலியும் தமிழுக்கு ஆற்றிவரும் தொண்டுகள் என்னைப் பெரிதும் ஈர்த்தன. சைவ உணர்வோடு தமிழின் அழகிற்கு அழகுசெய்யும் ஈழத்துத்தமிழர்களின் பேச்சு வழக்கும், விருந்தோம்பும் பண்பும், எளிமையும் மறக்க முடியாதவை''.

# "இ. தமிழர்' ஆ. சங்கத்தின் சிந்தனைக்கு'

(வேலணை)

''பல்வேறு பிரிவெண்ணங்களோடு இரண்டு ஆசிரியர் சங்கங்களில் அங்கம் வகித்து வந்த தமிழாசிரியர்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி- ஒரு சங்கமாக இயங்கவைத்து வெற்றிகண்டவர் அமரர் பாலசுப்பிரமணியம். மொழிவழிரீதியாகத் தொழிலாளர்கள் இணைந்து செயற்படவேண்டுமென்று கனவுகண்டவர் அமரர் பாலா. மெழுகுவர்த்தி போன்று தன்னை அழித்து ஆசிரியர்களுக்கு ஒளிதந் பாலாவின் குழந்தைகளின் எதிகாலத்துக்காகஆக்கபூர்வமான திட்டமொன்றை வகுத்துச் செயற்படுத்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முன்வர வேண்டும்.''

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க முன்னாள் பொதுச் செயலாளரும் சட்டத்தரணியுமான திரு என். பாலசுப்பிரமணியத்தின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு பேசுகையில் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரும் சட்டத்தரணியுமான திரு. எஸ், கே. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# செந்தமிழ் வாரிதி!

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையின் 25 வது மணிவாசகர் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற வருகை தந்த தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர் இரா. செல்வக்கணபதிக்கு மணிவாசகர் விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சிகளின் போது காரைநகர் மணிவாசகர் சபையார் 'செந்தமிழ்வாரிதி' என்ற பட்டமளித்துக் கௌரவித்தனர். இப்பட்டத்தினை சபையாரின் சார்பாக நல்லை ஆதினக் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கினார்கள். (அ)

# தாய் பணம் கொடுக்க மறுத்தார்: மகன் தற்கொலை

(மாவிட்டபுரம்)

வேலை எதுவிமற்ற நிலையில் பெற்றோரிடம் அடிக்கடிபணம் பெற்று ஆடம்பரமாக யாழ். வந்த வாலிபர் ஒருவர் பெற்றோர் பணமில்லை என்று கூறியதும் மனமுடைந்து நஞ்சருந்தி மரணமானார்.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த விநாயகர் சிவசுப்பிரமணியம் (22 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்திய சமயம் தாய் விநாயகர் சிதம்பரம் சாட்சியமளிக்கையில் காலமான தமது மகன் வேலை எதுவுமின்றியிருந்ததாகவும் வீட்டில் அடிக்கடி தம்மிடம்பணம் பெற்று அளவுக்கு மிஞ்சிய மதுபோகையில் கூட்டாளிகளுடன் சேர்ந்து திரிந்ததாகவும் சம்பவதினம் 200 ரூபா தம்மிடம் கேட்டபோது தாம் இல்லையென்று கூற நஞ்சருந்தப் போததாகக் கூறியதாகவும் முன்னரும் இப்படியாக அவர் கூறுவதால் தாம் அதை நம்பவில்லை. அன்று அவர் நஞ்சருந்தியபின் அவரைக் காப்பாற்ற எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை என்றும் சொன்னார். மு. பாலசுப்பிரமணியமும் சாட்சியமளித்தார். தற்கொலை எனத் தீர்ப்பளிக்சட்பட்டது. (அ)

......

## பொங்கல் விழா

(மட்டக்களப்பு)

நாளை தைப்பொங்கல் தினமன்று மட்டக்களப்பு பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபா சமித்தியினரின் தைப்பொங்கல் விழா மட்டக்களப்பு ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கூட்டுப்பிரார்த்தனை பஜனை என்பன நடைபெறும் என்றும் இதற்கான ஏற்பாடுகளை சமித்தியினர் மேற்கொண்டு வருவதாகவும் சமித்தியின் செயலாளர் திரு. ஆ. வடிவேல் தெரிவித்தார்.

......

## பரிசு பெற்றார்

புலோலி)

நாவலர் நூற்றாண்டு நினைவு விழாவை யொட்டி அகில இலங்கை ரீதியில், கொழும்பு விவேகானந்த சபையினரால் நடாத்தப்பட்ட 'நாவலர் எழுந்துமானப் பேச்சுப்போட்டியில் அதிமேற்பிரிவில் ஹாட்லிக்கல்லூரி மாணவன் செல்வன் பா. சிவகுமாரன் இரண்டாவது பரிசைப் பெற்றுக்கொண்டார். (அ?

# விவசாய அபிவிருத்திபற்றி புதியமுறை ஆராய்ச்சி

( லோலி)

'விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி அமைச்சு புதியமுறையிலான விவசாய அபிவிருத்தி முறைகளை ஆராய்ந்து கண்டுபிடித்துவருகின்றது, இவ் ஆராய்ச்சிகளின் பயனைவிவசாயிகள் இன்று அனுபவிக்கமுடிகின்றது. விவசாய விஸ்தரிப்பு சேவையாளர்கள்மூலம் விவசாயமுறைகளை விவசாயிகளிடம் புகுத்திவருகின்றது''

இவ்வாறு யாழ்.மாவட்ட விவசாய விரிவாக்க அதிபர் திரு. சிவமுத்துலிங்கம் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது:

விவசாயிகள் அதிகாரிகளைத் தேடி அலைந்துதிரியவேண்டிய நிலை நீக்கப்பட்டுவிட்டது. அதிகாரிகளே விவசாயிகளைத் தேடி செல்கின்றனர். இதன்மூலம் விவசாய உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு விவசாய விஸ்தரிப்பு சேவையாளர் பகுதிக்கும் 24 தொடர்புக் கமக்காரர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் பின்பற்று கமக்காரர்களாவர். இவர்களுக்கூடாக செயற்திட்டங்கள் ஆலோசனைகளைப்பெறமுடியும். புதிய விவசாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விவசாயஅதிகாரிகள் தொடர்புக்கமக்காரர்களின் பகுதிகளுக்குச்சென்று நேரடியாக விவசாயிகளைச் சந்திக்கின்றனர் என்றார். (அ)

## இடமாற்றம்

(வேலணை)

வேலணைக் கிராமசபையில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. சி. சரவணமுத்து-இம்மாதம் தொடக்கம் நெடுந்தீவு கிராம சபைக்கு பிரதமலிகிதராக இடமாற்றம் பெற்றுச் சென்றார். வேலணை கிராமசபையில் தொழில் நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு. ச. தங்கராசா புலோலி கிராமசபைக்கும், வேலணை கிராமசபையில் ஆயுள்வேத வைத்தியராகக் கடமையாற்றிய திரு. இ. முருகவேள் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தனியூற்றுக் கிராமசபை வைத்தியசாலைக்கும் அங்கு கடமையாற்றிய வைத்தியர் திருமதிசிவா. வேலாயுதம் வேலணை கிராமசபைக்கு வைத்தியராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (அ)

# "ஈழநாடு"

## தேர்தல் போட்டி

இந்தியப் பாராளுமன்ற (லோகசபை) இடைக்காலத் தேர்தலையொட்டி ''ஈழநாடு'' நடத்திய தேர்தல் போட்டி சம்பந்தமாக நாம் உங்களுக்கு அறிவிக்கும் மற்றுமொரு மகிழ்ச்சியான செய்தி---

---மிகவும் பாதுகாப்பான இடத்தில், 'சீல்'வைக்கப்பட்டு, பத்திரமாக வைக்கப்பட்டிருக்கும் தேர்தல் கூப்பன் பெட்டி; அடுத்தவாரம் திறக்கப்படும் என்பதை உங்களுக்குத்தெரியப்படுத்தும் அதேநேரத்தில், உங்கள் கூப்பன்களைப்பரிசீலனை செய்யப்போகும் உயர்மட்டக்குழுவில் இடம்பெறப்போகும் அதிகாரிகளையும் இங்கு உங்களுக்கு அறிமுகப்படுத்திவைக்கின்றோம்:

- திரு. எஸ். வைத்தியநாதன் (மனேஜர்-மட்டுப்படுத்தப்பட்ட வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்)
- திரு. பி. சிவயோகநாதன் (விற்பனைப்பகுதி முகாமையாளர், த பினுன்ஸ் கம்பெனி, யாழ்ப்பாணம்)
- திரு. எஸ். புவனச்சந்திரன் (எஸ். சின்னத்துரை & சகோதரர், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்)
- திரு. து. சீனிவாசகம் (பொதுமுகாமையாளர்- இயக்குநர் ''ஈழநாடு'')
- திரு. எஸ். கே. அம்பலவாணர் (உதவி முகாமையாளர் ''ஈழநாடு'')
- திரு. B. சிவானந்தன் (இயக்குநர் ''ஈழநாடு'', அதிபர்--கலாநிலைய அச்சகம்)
- திரு. எஸ். எம். கோபாலரத்தினம் (ஆசிரியர்குழு ''ஈழநாடு'')
- திரு. கே. ஜி. மகாதேவா (ஆசிரியர்குழு ''ஈழநாடு'')
- கே. கனகசபாபதி (நிர்வாகப்பகுதி ''ஈழநாடு'')

தேர்தல்போட்டி சம்பந்தமான மேலும் விபரங்களுக்கு 25-1-80-ம் ''ஈழநாடு'' பத்திரிகையில் பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அ. தி. மு. க. -- இ. காங். உறவு

# எம்.ஜி.ஆரின் கூற்றுவெறும் வாதத்திற்காகவே

## இந்திரா காங்கிரஸ் எம். பி. மறுப்பு

(சென்னை)

இந்திராகாங்கிரஸ்- அ. தி. மு. க. உறவு புதுப்பிக்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் தெரிவித்திருக்கும் கருத்துக்கு இந்திரா காங்கிரஸ் எம். பி. திரு. வெங்கட்ராகவன் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

எம். ஜி. ஆரின் இந்த நம்பிக்கைக்கு எதுவித அர்த்தமுமில்லை என்றும் இந்திரா காங்கிரஸுடன் நட்புறவு பாராட்ட அ தி மு க வுக்குத்தான் அதிக உரிமை இருப்பதாக திரு. எம். ஜி. இராமச்சந்திரன் வெறும் வாதத்திற்காகவே கூறிவருகிறார் என்றும் திரு. வெங்கட்ராகவன் கூறியுள்ளார்.

திருமதி இந்திராவுடன் திரு. கருணாநிதி அண்மையில் புதுடில்லியில் நடத்திய பேச்சுவார்த்தைகள் சுமுகமாகவே இருந்தது என்றும் கடந்த தேர்தலில் இருந்த கூட்டணி அமைப்பு தொடர்ந்து இருக்கும் என்றும் திரு. வெங்கட்ராகவன் கூறினார். (இ)

# ஆப்கானிஸ்தானில் வெளிநாடுகளின் தாக்குதல்

காபூல் ஜன. 12

ஆப்கானிஸ்தானில் வெளிநாடுகளின் தாக்குதல் அபாயம் நீங்கியபின்னரே சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறும்.

இவ்வாறு ஆப்கான் அதிபர் ஜனாப் பாபரஸ் கார்மல் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் அதிபராகப் பதவியேற்ற பின்னர் ஜினாப் கார்மல் இன்றுமுதல் தடவையாக பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றை நடத்தினார்.

அமெரிக்காவின் ஏகாதிபத்திய நடவடிக்கைகள், சீனாவின் ஆக்கிரமிப்பு அபாயம், பாகிஸ்தானின் ஆத்திரமூட்டும் செயல்கள் ஆகிய நீங்கிய பின்னர் சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானைவிட்டு வெளியேறும் என்று தாம் நம்புவதாகவும் அவர் கூறினார். (இ)

## இ. காங்கிரசில் 3 ஆயிரம் பேர் சேர்ந்தனர்

(சென்னை)

தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிஸிலிருந்து 3 ஆயிரம் பேர் ராஜினாமாச்செய்து இந்திராகாங்கிஸில் சேர்ந்து கொண்டனர் என்று அறிவிக்கப்பட்டது. [இ]

# 'தமிழர்--முஸ்லிம்கள் உறவு மொழிவழிவந்தஒற்றுமையே

## யாழ். நகரில் புத்தளம் டாக்டர் இலியாஸ்

(யாழ்ப்பாணம்)

''இனக்கலவரங்களின் போது தமிழர்களுக்கு முஸ்லிம்களும, முஸ்லிம்களுக்கு தமிழர்களும் பாதுகாப்பளித்தனர். நாம் சிறுபான்மையினர் என்பதால் ஏற்பட்ட ஒற்றுமையல்ல இது. மொழி வழி வந்த ஒற்றுமைதான் இந்தப் பரஸ்பர எண்ணத்திற்குக் காரணம்''.

இவ்வாறு கடந்த தேர்தலில் புத்தளம் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராகப் போட்டியிட்ட டாக்டர் இலியாஸ், யாழ். மாநகரசபை மண்டபத்தில் இனக்கலவரங்களின் போது கொலையுண்டவர்களின் நினைவாக நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

### முஸ்லிம்களில் தலைவர்கள் இல்லையே

''தமிழ்த்தலைவர்கள் மிகவும் நேர்மையும், கண்ணியமும் துணிச்சலுடன் செயலாற்றவும் வல்லவர்கள். ஆனால் முஸ்லிம் மக்கள் மத்தியில் அப்படிப்பட்ட நேர்மையான தலைவர்கள் இல்லை, மற்றவர்கள் மத்தியில் அண்டிவாழ்பவர்களாகவே இருக்கிறார்கள். அதனால்தான் 1976ம் ஆண்டு புத்தளம் பள்ளிவாசலில் வைத்து 9 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டபோது 13 எம். பி.க்கள் பாராளுமன்றத்தில் இருந்தும் ஒரு எம்.பி. கூட இந்த அநியாயமான செயலைக் கண்டித்துப்பேச வக்கில்லாது இருந்து விட்டனர். அப்பொழுது பாராளுமன்றத்தில் தந்தை செல்வா ஒருவரே கொலைசெய்யப்பட்ட 9பேருக்காகத் துணிச்சலுடன் குரல் கொடுத்தார்''.

''நாம் மதத்தால் வேறுபட்டாலும் மொழியாம் ஒன்றுபட்டவர்கள் என்ற காரணத்தினால்தான் எம்மவருக்கு இன்னல் வந்தபோது தந்தை குரல் கொடுத்தார்'' என்றார். (ஜெ)

# "புரட்சியின் மூலம்தான் உரிமையைப் பெறலாம்"

### மாவைசேனாதிராசா

மாவை சேனாதிராசா பேசுகையில் கூறியதாவது:

''ஐக்கியதேசியக்கட்சி அரசு ஒரு தார்மீக அரசு என்றும், அங்குதான் ஜனநாயகம் இருக்கிறதென்றும் கூறப்படுகிறது. பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சிமாறினால் அவர்களின் பதவிபறிபோகுமென்று சட்டம் கொண்டுவந்த இவ் அரசாங்கம் கூட்டணியிலுள்ள ஒருவரை ஐக்கியதேசியக்கட்சியில் சேர்ப்பதற்காக அரசியல் சாசனத்தையே மாற்றியது என்றால் எப்படி இவ்வரசாங்கத்தில் ஜனநாயகத்தை எதிர்பார்க்கமுடியும்.

''வாக்குச்சீட்டினால் மட்டும் நாம் எமது உரிமையைப் பெற்றுவிடமுடியாது. எம்மத்தியில் சிந்தனைப்புரட்சி, சமுதாயப் புரட்சி ஏற்படவேண்டும். புரட்சியின் மூலமும், போராட்டத்தின் மூலமும் தான் நாம் எமது உரிமைகளைப் பெறமுடியும். அதற்காக எமது இயக்கம் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

''அறவழிப் போராட்டமானால் என்ன, புரட்சிவழிப் போராட்டமானால் என்ன, எதற்கும் இயக்கத்தைக்கட்டிக் காக்கவேண்டும்'' என்றார்.

### ஈழவேந்தன் உரை

திரு. ஈழவேந்தன் பேசுகையில்:

காலத்திற்குக்காலம் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். தமிழன் உயிரோடு வாழ வேண்டுமானால் அவனுக்கென ஒருநாடு வேண்டும்: நாடு கிடைத்தால்தான் தமிழனின் நாகரிகமும் பண்பாடும் காப்பாற்றப்படும்.

''தமிழ்ஈழத்தைக் காக்கும் பணியில் உயிர் இழந்தோர் சிலர். உயிர்விடக் காத்திருப்போர் பலர்'' என்றார்''. (கொ)

# தோட்டத்தில் புகுந்துகலாட்டா 9 இளைஞர் சிக்கினர்

(மன்னார்)

பெரியமடு குடியேற்றத்தில் 9 இளைஞர்கள் மிளகாய்த் தோட்டத்தில் புகுந்து மிளகாய்ச்செடிகளைப் பிடுங்கி எறிந்து தோட்டச் சொந்தக்காரருக்கு பெரும் நட்டம் ஏற்படுத்தியதாக மன்னார்ப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. மன்னார்ப் பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்துசென்று 9 இளைஞர்களைக் கைதுசெய்தனர்,

விசாரணையின் பின்னர் 9 இளைஞர்களும் பிணையில் விடுதலைசெய்யப்பட்டனர்.

### வாரியப்பொலபகுதியில்

# பெருந்தெருத்திணைக்கள் அதிகாரிகள் மீது பொலிஸ் விசாரணை

[வாரியபொல]

வாரியபொல பெருந்தெருக்கள் திணைக்களத்தில் சில அதிகாரிகள் பல லட்சம் ரூபாய்களை தவறான வழியில் கையாண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக சில தகவல்களைப்பெற்ற குருநாகல் மாவட்ட அமைச்சர் திரு. ஜெயவிக்கிரமபெரேரா குருநாகல் பொலிசாரை இதுசம்பந்தமான விசாரணையை மேற்கொள்ளும்படி கேட்டிருந்தார். குருநாகல் பொலிசார் விசாரணையை நடத்தியபின், குற்றத்தடுப்பு விசாரணைப்பகுதியினர் தொடர்ந்துவிசாரணையைமேற்கொண்டுவருகின்றனர்.

இங்கு எந்த வேலையும் செய்யாத120 தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டிருப்பதாக விசாரணையின்போது தெரியவந்துள்ளது. சிறிய திட்டங்களுக்குப் பெருமளவு பணம் செலவிடப்பட்டமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அரைமைல் தூரமுடைய ரோட்டை செப்பனிடுவதற்கு 18,000ரூபா செலவிடப்பட்டதாக விசாரணையின்போது தெரியவந்துள்ளது. [வெ]

# டைனமைற் வைத்து மீன் பிடித்தார்களாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்முனைக் கடலில் டைனமைற் வைத்து மீன்பிடித்ததாக 6பேர் சந்தேகத்தின்மீது கைதுசெய்யப்பட்டனர். யாழ்,மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் திரு. த. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில்சென்ற கோஷ்டி இவர்களைக்கைதுசெய்தது.

குருநகரைச்சேர்ந்த இந்த சந்தேகநபர்கள் 6 பேரும் யாழ். நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோதுஅவர்களை 750ரூபா பிணையில்செல்வதற்கு நீதவான் அனுமதித்தார். [கொ-அ]

### 'ஈழநாடு'ஆதரவில்

# வயாவிளான் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை ஆரம்பம்

[பாலாலி]

வயாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையம் நடாத்தும் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுபோட்டி பொங்கல் தினமான நாளை ஆரம்மாகிறது. ''ஈழநாடு'' ஆதரவில் நடைபெறும் இச்சுற்றுப்போட்டியில் மொத்தம் 38 கோஷ்டிகள் பங்குபற்றுகின்றன. 11 வீரர் போட்டி, 7 வீரர் போட்டி என இருவகையாக நடாத்தப்பட்டு, சாம்பியன்கள் தெரிவு செய்யப்படும். 11 வீரர் போட்டி லீக்முறையிலும் 7 வீரர் போட்டி நொக் அவுட் முறையிலும் நடைபெறும். தினமும் மூன்று போட்டிகள் வீதம் நடாத்தப்பட்டு, பெப்ரவரி 3ம் திகதி இறுதிப்பேட்டியும் பரிசளிப்பு விழாவும் இடம்பெறும்.

11 வீரர் போட்டியில் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்படும் கோஷ்டிக்கு லாலா சோப் உரிமையாளர் திரு. வன்னியசிங்கம் அன்பளிப்பு வெற்றிக்கிண்ணமும், அமரர் சி. கந்தவனம் ஞாபகார்த்தக்கேடயமும் பரிசளிக்கப்படும். 7வீரர் பேட்டியில் சாம்பியன் கோஷ்டிக்குத் திருமதி எஸ். ஈ. முருகையா அன்பளிப்பு வெற்றிக்கிண்ணம் பரிசளிக்கப்படும். நிலைய மைதானத்தில் நடைபெறவிருக்கும் இச்சுற்றுப்போட்டிகளுக்கான சகலஒழுங்குகளையும் சுற்றுப்போட்டி அமைப்பாளர் திரு. எம். ஜெகநாதன் மேற்கொண்டு வருகிறார்.

### நாளைய போட்டி

நாளை நடைபெறும் முதலாவது போட்டியின் 7 வீரர் ஆட்டத்தில் ஒட்டகப்புலம் சென். [illegible] கழகத்தை எதிர்த்து [illegible] காட்டர் வி. கழகம் போட்டியிடும். தொடர்ந்து இடம் பெறும் 11 வீரர் ஆட்டத்தின் முதல் போட்டியில் தோலகட்டி மின்னொளிவி.கழகத்தை எதிர்த்து கொழும்புத்துறை ஜெட் பயினேஸ் வி. கழகமும், இரண்டாவது போட்டியில், குளமன்கால் சென்சேவியர் வி. கழகத்தை எதிர்த்து கொக்குவில் உதயசூரியன் வி. கழகமும் போட்டியிடும் இப்போட்டிகள்அனைத்தும் நிலைய மைனத்தில்நடைபெறும்.

### புதனன்று நடைபெறும் போட்டி

நாளை மறுதினம் புதன் கிழமை நடைபெறவிருக்கும் முதலாவது போட்டியின் 7 வீரர் ஆட்டத்தில் அளவெட்டி- வளர்மதி வி. கழகத்தை எதிர்த்து கரணவாய்- வள்ளுவன் வி. கழகம் போட்டியிடும், தெடார்ந்து இடம் பெறும் 11 வீரர் போட்டியில் அச்சுவேலி பனம்பொருள் பயிற்சிப் பாடசாலை வி. கழகத்தை எதிர்த்து ஈவினை பறக்கும் இளைஞர் வி. கழகம் 4-30 மணிக்குப் போட்டியிடும். இப்போட்டிகள் நிலைய மைதானத்தில் நடைபெறும். (அ)

# இந்து ஆலயபரிபாலனசட்டம்: அமைச்சர் இராசு நடவடிக்கை

(கொழும்பு)

இந்து ஆலய பரிபாலனச்சட்டத்தினை உருவாக்குவதற்கு பிரதேச அபிவிருத்தி, இந்து சமயம்,தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சு விரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறது.

இதுசம்பந்தமான ஆலோசனைக்கூட்டமொன்று மேற்படி அமைச்சில் நடைபெற்றுள்ளது. இலங்கையிலுள்ள இந்து ஆலயங்களின் நிர்வாகம், சொத்துக்கள் பற்றிய விபரங்களை உள்ளடக்கியதாக இச்சட்டமூலம் அமையுமெனத் தெரிகிறது.

இந்து ஆலய பரிபாலனச் சட்டத்தின்கீழ் ஆலய நிர்வாக விஷயங்களைத் தனிப்பட்ட ஓர் ஆணையாளரின் அதிகாரத்தின்கீழ் விடாமல் மாவட்டரீதியில் அரசாங்க அதிகாரிகளின் நிர்வாகத்தின்கீழ் விடவேண்டுமென்ற கோரிக்கையைச் சில ஆலய நிர்வாகிகள் சமர்ப்பித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

(வெ)

## மனித...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

றையும் நிகழ்த்திக் கொண்டாடி வருகின்றோம் இதனால் வீட்டுவளர்ப்பு விலங்கான மாட்டின் புனிதத்துவமும் பயனும் கூடுகின்றது பெருகுகின்றது என்ற ஐதிக நம்பிக்கையும் உண்டு.

பொங்கலின் சிறப்பு மரபு வழிபயிர்ச்செய்கையின் சிறப்பு பொங்கலின் பெருமை ஒருவன் தான் தன்சொந்த முயற்சியில் பெற்ற அறுவடைப்பெறுபேற்றின் அனுபவமகிமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REGAL (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m.
JAMES COBURN. Potrays a man with a mission... gathering a team of SKYRIDING daredevils to rescue a kidnapped wealthy American family!!
They soared from the skies to stage the most daring rescue ever filmed!
SKY RIDERS
See...the most exciting, dangerous and fastest Air drama...FULL OF ACTION Co-starring: SUSANNAH YORK...ROBERT CULP and CHARLES AZNAVOUR
Color byDELUXE

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
தினசரி: 10-30, பி. ப. 2-30, 6-30, 9-30
ஏ. வி. எம். ராஜன், ஜெயசித்திரா, ஜெய்கணேஷ், அசோகன்
தாயில்லா குழந்தை

Today only
RANEE (JAFFNA) Daily at: 10-30, 2-15 4-45, 7-15&9-45p.m.
Terrence Hill Bud Spencer in
CRIME BUSTERS
பொங்கல் விருந்தாக நாளை முதல்
நாகேஸ்வரராவ் - சாவித்திரி நடித்த
உள்ளத்தை உருக்கும் காதல் திரையோவியம்
தேவதாஸ்

100-வதுவெற்றித்திருநாளைநோக்கி
ஸ்ரீதர் (யாழ் நகர்)
தினசரி காலை 10-30, பி, ப. 2-30, 6-15, 9-45
சிவாஜிகணேசன்-சுஜாதா நடித்த
தீபம்
(வெள்ளிவிழாச் சித்திரம்)
(வர்ணக்கலர்)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மனோரமா, தேங்காய் சீனிவாசன் நடிக்கும்
4-வது ஜனத்திரள் வாரம்
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்)

100வது வெற்றித் திருநாளை நோக்கி ஓடுகிறுள்!
மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, சுஜாதா, சந்திரமோகன், கவிதா நடித்த
அந்தமான் காதலி
(வர்ணப்படம்)

100-வது வெற்றித்திருநாளைநோக்கி
சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30 6-30, 9-45
ஜெய்சங்கர், ஸ்ரீதேவி, எம். ஆர். ராதா
டாக்ஸி டிரைவர்
கலர்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா நடித்த
எங்கள் தங்க ராஜா (புத்தம்புதிய பிரதி-கலர்)

லிடோ (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-30
போன்: 7693
ஷண்முகப்பிரியா

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 30-ந்திகதி
திங்கட்கிழமை
14-1-1980

மேடம்:- ஏமாந்த நேரத்தில் உங்களை வீழ்த்தி விடுவதற்கு சிலர் முனைவர். வேண்டாத நடவடிக்கைகளைப் பின் போடவும், திருப்தியற்ற தினம்.

இடபம்:- குளுமையான சம்பவங்கள் இடம்பெறும், வாழ்க்கையில் பசுமை தோன்றும், களஸ்திரசுகமும் உண்டு, கண்ணியமான நாள்.

மிதுனம்:- சிறுபிணி வாட்டும், எதிர்பாராத முனையிலிருந்து ஆபத்து விளையக்கூடும், இயந்திரங்களுடன் பழகுபவர் அவதானம் வேண்டும்.

கடகம்:- செய் தொழிலில் சிறப்பு ஏற்படும், கால்நடை விருத்திக்கு மிடமேற்படலாம், முதியவர் ஒருவரின் ஆதரவும் கிடைக்கும்.

சிங்கம்:- பதவியில் உயர்வு கண்டு பண்புடன் வாழ்வீர் இன்று. தனத்துடன் நண்பர் சேர்க்கை தவருது கிடைக்கும் இந்நாள்.

கன்னி:- மதிப்பு உயரும், வரவிலும் திருப்தியுண்டு, சகோதர மகிழ்ச்சியுண்டு, சுகமான வாழ்வுமுண்டு.

துலாம்:- கடமைபுரியுமிடத்தில் சதிவேலைகள் நடக்ககூடும், திடீர் நடவடிக்கையால் வருந்த நேர்டுப், உடல் சுகாதாரம் வேண்டும்,

விருச்சிகம்:- சிக்கல்களை தவிர்த்துக் கொள்ளவும், இதயச் சுமை வேதனைப்படுத்தும், குறுக்குவழியை நாடவேண்டாம்.

தனுசு:- நலன்தரும் சம்பவங்களுக்கு இடமுண்டு, இல்லத்தில் இனிமை பிறக்கும், சிலருக்கு தலைமைஸ்தானமும் கிடைக்கலாம்.

மகரம்:- வைத்தியச் செலவுக்கிடமேற்படலாம், வியாபாரத்துறையில் நஷ்டமேற்படலாம், ஆத்திர உணர்ச்சியை அடக்கவும்.

கும்பம்:- நல்லதை செய்வதில் உற்சாகம் காட்டுவீர்கள், பொதுவாக தொழில் சீர்பெறும், வாழ்க்கை நலனும் வந்துசேரும்.

மீனம்:- புதிய பாதை வழிதிறக்கும், புத்திரர் சுகமுமுண்டு, இதயத்தில் இன்பம் பொங்கும், இல்லத்தில் இனிமை தங்கும்.

சோ ட கலாநிதி
திருமலை
க. ்வலுப்பிள்ளை

## தந்தி நந்தியானது

[மன்னர்]

தபால்தந்தி இலாகாவால் வெளியிடப்பட்டுள்ள தந்தி மணிஓடர் உறையில் தந்தி என்ற சொல்லுக்குப் பதிலாக நந்தி என்று பிழையாக அச்சிடப்பட்டுள்ளது.

நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம்.ஜி.ஆர்.-வாணிஸ்ரீ
ஊருக்கு உழைப்பவன்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். - லதா
உழைக்கும் கரங்கள்

மட்டு. மாவட்ட அதிபர்களுக்கு

# இலவச பாடப்புத்தகங்களை எடுத்துக்கொள்வதில் பிரச்னை

(மட்டக்களப்பு)

புத்தக நிலையத்திலிருந்து பாடப் புத்தகங்களைப் பாடசாலைக்கு சொந்தச் செலவில் எடுத்துச் செல்வதா? இவைக் களத்திற்குரிய வாகனங்களை வழங்கி உதவி செய்தால் என்ன? மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலை அதிபர்கள் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளனர்.

இலவசப் பாடப்புத்தகங்களை புத்தகம் பாதுகாப்பான இடங்களில் இருந்து அதிபர்கள் வட்டாரக் கல்வி அதிகாரியிடம் பெற்றுக்கொண்டு பாடசாலைகட்கு எடுத்துச் சென்று பதினெட்டாம் திகதி மாணவர்கட்கு வழங்கப்பட வேண்டும். இதனைப் பாடசாலைவரை எடுத்துச் செல்ல போக்குவரத்து வசதி செய்துதரப்படும் எனக் கல்வி சேவை அமைச்சர் திரு. லயனல் ஜயதிலகா அதிபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார். ஆனல் மட்டக்களப்பு கல்வித்திணைக்களம் இத்தகைய ஏற்பாடுகளை செய்யாமல் அதிபர்தான் பாடசாலைக்கு கொண்டு செல்ல வேண்டுமெனவும், அதற்கான வாகனச் செலவு வழங்கப்படமாட்டாதெனவும் தெரிவித்துள்ளது. இதனல் கல்வி வட்டாரம் தோறும் அமைந்துள்ள நிலையங்களில் இருந்து பாடசாலைகளுக்கு எடுத்துச்செல்ல ஏற்படும் வாகனச் செலவை அதிபர்கள் பொறுப்பேற்க வேண்டிய நிலை குறித்து அவ்வட்டாரங்களில் கண்டனம் எழுந்துள்ளது.

பல பாடசாலைகள் ஆற்றில் தோணிமூலம் பிரயாணம் செய்யவேண்டிய நிலை, சில பாசாலைகள் புத்தக நிலையத்தில் இருந்து இருபத்தைந்து மைல்களுக்கப்பால் உள்ளவை இத்தகைய போக்கு வரத்து வசதி செய்யப்படாமையால் கிராமப்புறப் பாடசாலை அதிபர்கள் மிகவும் பாதிக்கப்படுகிருர்கள். அவர்கட்கு குறைந்தபட்சம் 150 ரூபாய் இதற்கான செலவு ஏற்படுகின்றது. இந்நிலை குறித்து மிகவும் கவலை தெரிவித்துள்ளார்கள்.

# மட்டக்களப்பு ஆசிரியர் உலகம் துக்கத்தில்

(மட்டக்களப்பு)

கடந்த புதன்கிழமை மோட்டார் சைக்கிளில் ரயில் விபத்தில் அகால மரணம் அடைந்த இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் முன்னுள் செயலாளரும், சட்டத்தரணியுமான திரு. என். பாலசுப்பிரமணியத்தின் அகால மரணம் குறித்து அவரின் உறவினர்கட்கு அனுதாபத் தந்திகள் மட்டக்களப்பு ஆசிரிய வட்டாரங்களில் இருந்து சென்ற வண்ணம் உள்ளன. இவரின் மரணம் குறித்து ஆசிரிய வட்டாரங்கள் கவலையுடன் காணப்படுகின்றன.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் திரு. டி. எஸ். ஜே. வணசிங்காகொழும்பில் இருந்து அனுதாபத் தந்தியை அனுப்பியுள்ளார். அவரைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. ப. இரத்தினராஜா, செயலாளர் திரு. கு. சௌந்தரராஜன், பொருளாளர்: திரு. கா. சின்னத்துரை ஆகியோர் உட்பட பல ஆசிரியர்களும் மட்டு வடக்கு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. யோ. முத்துராஜாவும் தன் அனுதாபத் தந்தியை அனுப்பியுள்ளார். சில ஆசிரியர்கள் இறுதி அஞ்சலி செலுத்த யாழ்ப்பாணம் சென்றுள்ளார்கள்.

## பன்னலை கணேச ச. ச. நிலையம்

(தெல்லிப்பழை)

பன்னலை கணேச சனசமூக நிலையத்தின் முப்பதாவது வருடாந்தம் பொதுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிலையத்தின் திறந்தவெளி அரங்கில் நிலையத் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வலிவடக்கு சமாசம் போட்டிகள் அனைத்திலும் முதலாம் இடத்தைப் பெற்றமைக்காக மன்றத்தின் சார்பில் நன்றியும் கூறப்பட்டது. நிலைய வளர்ச்சிக்கு அனைவரதும் ஒத்துழைப்பினையும் எதிர்காலத்திலும் வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டது. திரு. கி. சின்னத்தம்பு ஜே. பி. அதிபர் திரு. சு. மாணிக்கம் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். பொதுக்கூட்டத்தின் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சியில் யாழ் மாவட்ட சனசமூக நிலைய உத்தியோகத்தர் திரு. வ. கிருஷ்ணசாமி கலந்துகொண்டார்.

புதுவருட நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது.

சனசமூக நிலையத்தின் போஷகர்களாக காங்கேசன் துறைப் பா. உ. திரு. அ. அமிர்தலிங்கம் இளைப்பாறிய துறைமுகப் பொறுப்பதிகாரி திரு. வே. சண்முகம், இளைப்பாறிய ஆசிரியர் திரு. வி. சங்கரப்பிள்ளை, திரு. சி. சின்னத்தம்பு ஜே. பி. ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நிலையத் தலைவராகப் பொதுச்சபையினரால் திரு-சி. சிவபால சுப்பிரமணியம் தெரிவுசெய்யப்பட்டார். உபதலைவர் திரு. சு. விமலநாதன் செயலாளர் திரு. ந. கிருஷ்ணமூர்த்தி, உபசெயலாளர் திரு. ந. சிவகுமாரதாஸ், பொருளாளர் திரு. ச. குகராசன் ஆகியோர் தெரிவாகினர். கணக்குப் பரிசோதகராக அதிபர் திரு. சு. மாணிக்கம் தெரிவாகினர்.

பதினுப்பேரை உறுப்பினர்களாகக் கொண்ட நிர்வாக சபையும் தெரிவாகியது.

## வெளிநாட்டுச் செலாவணி பெறும் வாய்ப்பு

[மன்னர்[

தலைமன்னர் - ராமேஸ்வரம் கப்பல்சேவை ஆரம்பமானதும் மன்னர் ஹட்டன்நாஷனல் வங்கி வெளிநாட்டுச் செலாவணியை வழங்க ஆரம்பித்துள்ளது. இந்தியா அல்லது வேறு நாடுகளுக்குச் செல்வோர் இவ் வங்கியில் வெளிநாட்டுச்செலாவணியைப்பெறலாம்.

தற்போது இலங்கைவரும் உல்லாசப்பிரயாணிகள் மன்னர் ஹட்டன் நாஷனல் வங்கியில் தமதுவெளிநாட்டுச்செலாவணியைப் பெற்றுக்கொண்டு கொழும்புபோன்ற இடங்களுக்குச்செல்கின்றனர்.

## திருக்குர் ஆன் பிரதிகள்

(மன்னர்)

அரபு நாடுகளால் வழங்கப்படும் திருக்குர்ஆன் பிரதிகளை வெளியூர்களிலுள்ள பள்ளி வாசல்கள் மதுசாக்களுக்கும் அனுப்பிவைக்க ஒரு கமிட்டியை நியமிக்குமாறு போக்குவரத்து அமைச்சரைக்கோரும் தீர்மானம் ஒன்றை தாராபுரம் முஸ்லீம் லீக் பாதுகாப்புச் சபை அனுப்பத் தீர்மானித்துள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**Dilka** Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும்
சிறந்த முறையில்
திருத்திக்கொள்ள...

டில்கா வாச்வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் கெட்டிடம்
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு The EELANAADU 50 சதம்

## இந்திரா காந்திக்கு பாகிஸ்தான் அதிபர் ஷியா பாராட்டு!

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானின் இராணுவ நிர்வாகி ஜெனரல் ஸியாவுல் ஹக், நேற்று திருமதி இந்திராகாந்திக்கு தமது பாராட்டுதல்களைத் தெரிவித்தார்.
புதிய பிரதமராகப் பதவி யேற்கப்போகும் திருமதி இந்திராகாந்தியுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு தனது வாழ்த்துக்களை ஜெனரல் ஸியா தெரிவித்துக்கொண்டார்.

Wolf MORTISE STAND

வூல்ப்
மின்சார
உபகரணங்களுக்கு
விஜயம் செய்யுங்கள்
ஏக விற்பனையாளர்:
நியூ தோன் எலக்ட்ரிக்கல்ஸ்
141-143, ஸ்தான்லி வீதி,
யாழ்ப்பாணம். போன் 7016.

மயிலிட்டியில்

# 24 வீடுகள் கையளிக்கும் வைபவம்: 17-ந் திகதி நடைபெறும்

(மாவிட்டபுரம்)
சேரி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் மயிலிட்டியில் அமைக்கப்பட்டு வீடற்ற ஏழை மக்களுக்கு வழங்கப்பட்ட 24 வீடுகளையும் இம்மாதம் 17ம் திகதி காங்கேசன்துறைப் பிரதிநிதியும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் அவ் வீடுகளில் உள்ளவர்களுக்கு சொந்தமாக வழங்கி உறுதிகளையும் கையளிக்க இருக்கிறார்.

அரசாங்கத்தின் சேரி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் காங்கேசன்துறைத் தொகுதியில் மயிலிட்டியில் 24 வீடுகள் கட்டப்பட்டு வீடற்ற ஏழை மக்களுக்கு வழங்கப்பட்டு அவர்களிடம் மாதம் 10 ரூபா வீதம் அறவிடப்பட்டுவந்தது,

ஆனால் இனிமேல் அவ் வீடுகளை அவர்களுக்கே சொந்தமாக வழங்கி அதற்கான உறுதிகளையும் கையளிக்க காங்கேசன்துறை பட்டினசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா இவ் வீடுகள் கையளிக்கும் வைபவத்தை மிகச் சிறப்பாக நடத்தும்படி பணித்ததன்பேரில் பட்டினசபை விசேடஆணையாளர் திரு. க. சண்முகநாதன் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இம்மாதம் 17ம் திகதி காலை பட்டினசபை மண்டபத்தில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் காங்கேசன்துறை பிரதிநிதியும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் கலந்துகொண்டு வீடுகளை கையளித்து உறுதிகளையும் வழங்குவார். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன,

## நஸீருக்கு நாளை வரவேற்பு

[யாழ்ப்பாணம்]
வலம்புரி சைக்கிளோட்டத்தில் உலகசாதனையை நிலைநாட்டிய ஜனாப் பரீத் நஸீருக்கு, பொங்கல்தினமான நாளை மாலை திறந்தவெளியரங்கில் வரவேற்பு அளிக்கப்படவுள்ளது,

அன்று நடைபெறும் இசை நிகழ்ச்சியில், சுஜாதா அத்தநாயக்கா, கலாவதி சின்னச்சாமி ஈழத்து பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொள்வர். வைபவத்தில் வைத்து குருநகர் அ. இ. தி. மு. க. மன்றம் ஈழத்து பாலசுப்பிரமணியத்துக்கு பட்டமளித்து கௌரவிக்கும்.
(கெ)

## தொடர்ந்து தடுப்புக்காவல்

[இஸ்லாமாபாத்]
பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் சூல்பிகார் அலி பூட்டோவின் மனைவியும் மகளும் இன்று மேலும் மூன்று மாதங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

## நியாயவிலையில் பொங்கல் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)
கட்டைவேலி- நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தைப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பாவனையாளருக்கு நியாயமான விலையில் சட்டி, பானை, பச்சை அரிசி, வாழைப்பழம், தேங்காய் ஆகியவற்றை விற்பனை செய்துவருகிறது. இதற்காக விசேஷ ஏற்பாடுகள் செய்துள்வது.

## பொங்கல் கலைவிழா

(பருத்தித்துறை)
வதிரிதமிழ்மன்ற ஆதரவில் வதிரி மாதர்சங்கம் பொங்கல் தினத்தை முன்னிட்டு வதிரி தமிழ் மன்ற முன்றலில் பொங்கல் கலைவிழா கொண்டாட முன்வந்துள்ளது.

இந்நிகழ்ச்சியில் வதிரி மாதர் சங்கம் ஒருங்கிணைந்து நடாத்தும் கே. புஸ்பராணியின் 'புத்தகப்பூச்சிகள்' எனும் தாளலயநாடகமும் நாடகமும் நாடகமாமணி வீ' கிருபாவின் ''மெரினு'' எனும் நாடகமும் இடம் பெறும். அத்தோடு 'மன்றம்'' எனும் கையெழுத்துப்பிரதியும் வெளியிடப்படும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)
கிழ்க்கரவை வாலிபர் வட்டம் நடாத்தும் பொங்கல் விழாவும் 2வது ஆண்டு கரபந்தாண்டசுற்றுப்போட்டியும் இன்றும் நாளையும் நடைபெறுகிறது. விளையாட்டில்வெற்றி பெறுவோருக்கு நாளை செவ்வாய்க்கிழமை பரிசில் வழங்கப்படும்.

இவ்விழாவில் பிரதம அதிதிகளாக உடுப்பிட்டி, பருத்தித்துறை எம். பிக்கள் கலந்துகொண்டு வெற்றிபெற்றோருக்குப் பரிசில்கள் வழங்குவர். இதனையடுத்து அன்று இரவு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.
(கொ)

## புலவர்மணி நினைவுதினம்

[மட்டக்களப்பு]
புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளையின் பிறந்ததினமான கடந்த பத்தாம் திகதி மட்டுநகர் இந்து மாணவ பேரவையினர், ஏழைச் சிறுர்களுக்கு அன்னாரின் நினைவாக உணவுப் பொட்டலங்களை வழங்கினர்.

இவ்வைபவத்திற்கு தலைமை வகித்த பேரவையின் அமைப்பாளர் செல்வன் ம. வரதன் பேசுகையில் 'புலவர்மணி மறைந்து ஒருவருடம் ஆகின்றது. அன்னாரின் பேரில் தோன்றிய ஞாபகார்த்த மன்றங்கள் எல்லாம் இப்போது எங்கே என்றே தெரியவில்லை. அவர்கள் இதுவரை அன்னாரின் நினைவை, வருங்கால சந்ததியினர் நினைவு பெறும்வகையில் எவ்வித பணியும் புரியாதது வேதனைதருகிறது.

புலவர்மணி மறைந்தாலும் அவர் என்றும் எம் உள்ளத்தில் நிலைத்து நிற்பார்'' என்று கூறினர். இவ்வைபத்தில் திரு. இரா. உதயகுமார் உட்படப் பலர் உரையாற்றினர்.

## 5கோடி ரூபா சேமிப்பு

[புலோலி]
பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக்கிளையில் 3 மாத காலத்தில் 1150 கணக்குகள் திறக்கப்பட்டுள்ளதுடன் 5 கோடி ரூபா வைப்பில்இடப்பட்டுள்ளதாகவும் தமிழ்ப் பகுதிகளாகிய வடக்கு கிழக்குப் பகுதிகளைப் பொறுத்தவரையிலே பருத்தித்துறைத் தேசிய சேமிப்பு வங்கிக்கிளையிலேதான் மூன்று மாதகாலத்திற்குள் 5கோடி ரூபாவைப்பில் இடப்பட்டுள்ளதாக தேசிய சேமிப்பு வங்கிப் பிரசார உத்தியோகத்தர் திரு.ஆர். சற்குணராசா தெரிவித்தார்.

... ...

## சத்திரசிகிச்சை

(பெல்கிரேட்)
யுகோஸ்லேவியா ஜனதிபதி மார்ஷல் டிட்டோ கடுமையாக சுகவீனமுற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டது,

அவரது இடதுகாலில் அவசரமாக நேற்று மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையைத் தொடர்ந்து ஜனதிபதி டிட்டோ இப்பொழுது ஓரளவு சுகமடைந்து வருவதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

### மு, மதியாபரணம்

தாவடி கொக்குவிலைச் சேர்ந்த சட்டத்தரணி மதியாபரணம் காலமானர். இவர் காலஞ்சென்ற திரு. சி. முத்துவேலு J. P. அவர்களின் அன்பு மகனும், விஜயலட்சுமியின் அன்புக்கணவரும், சரோஜினிதேவி, சாரதா, சாவித்திரி, பத்மநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம் (பல்கலைக்கழகம் நைஜிரியா) ரகுவரன் (அபுதாபி), ஆகியோரின் மாமனுரும், காலஞ்சென்ற மு. குமாரசிங்கத்தின் சகோதரருமாவர். தகனக்கிரியைகள் இன்று 14-1-80 பிற்பகல் 1 மணியளவில் தாவடிமயானத்தில் நடைபெறும். 4661

## மரண அறிவித்தல்

### திருமதி கனகாம்பிகை குமாரசாமி

அமரர். டபிள்யு. எம். குமாரசாமி அவர்களின் அன்பு மனைவியும், திருமதி ருக்மணி இராசையா, கோபால் குமாரசாமி (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) திருமதி அன்னலட்சுமி அம்பலவாணர், அமரர் துரை குமர்ரசாமி (கூட்டுறவு இலாகா) டாக்டர் கிருஷ்ண குமாரசாமி, திருமதி நாராயணி சபாரத்தினம், விஜி குமாரசாமி (இயக்குநர் கைத்தொழில் அபிவிருத்திச்சபை), ரங்கா குமாரசாமி (உரிமையாளர் கொன்ராக்ட்ஸ் அன்ட் சப்ளைஸ் கம்பனி), ராம் குமாரசாமி (இயக்குநர் யுனைட்டட் அக்ரோ என்ஜினியரிங்), பத்தி குமாரசாமி (சுப்பிரின்டென்ட் கிளாரன்டென்ட் தோட்டம், நுவரேலியா), திருமதி சத்தியபாமா ராஜலிங்கம், திருமதி திரிபுரசுந்தரி யோகானந்தம், திருமதி ஜனகலட்சுமி ராஜமோகன் (பிரிட்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும் அமரர் இராசையா (மாவட்ட விவசாய அதிகாரி) திருமதி மார்கரட், அமரர் அம்பலவாணர் (மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர்), திருமதி சரஸ்வதி, திருமதி ராணி அருந்ததி தேவி, த. சபாரத்தினம் (கொமர்ஷல் வங்கி,கொழும்பு), திருமதி ஞானேஸ்வரி, திருமதி செல்வராணி, திருமதி சந்திராதேவி, திருமதி திலகவதி, இ. ராஜலிங்கம் (நியுலங்காஉலோகத்தொழிற்சாலை) யோ. யோகானந்தம் (யுனைட்டட் அக்ரோ என்ஜினியரிங்). கி. ராஜமோகன் (பிரிட்டன்) ஆகியோரின் மாமியாருமான திருமதி கனகாம்பிகை குமாரசாமி இறைவனடி எய்தினர்.

அன்னரது பூதவுடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள 50ம் இலக்க அன்னரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். 4662

மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்

உங்களை
திருச்சிராப்பள்ளி,
மதுரை, பம்பாய்,
கோலாலம்பூர்,
சிங்கப்பூர், பரிஸ்,
லண்டன், துபாய்,
சவூதி அரேபியா,
கனடா
ஆகிய நாடுகளுக்கு
அழைத்துச் செல்ல

மற்றும்
பாஸ்போட்,
அமெரிக்கன்
டிறவலர்ஸ் செக்
உலகின் எப்பகுதிக்கும்
விமான டிக்கட்,
சுற்றுலாக்கள்
ஆகிய உங்கள்
தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில்
ஒழுங்குசெய்துகொள்ள
இன்றே தொடர்புகொள்ளுங்கள்

மக்கினென் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்.,

தபால்பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible]சோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜனவரி மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியி[illegible]
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No GE/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org